# வங்க. கம்யூனிஸ்ட் தலைவரைக் கொல்லச் சதி


Registered as a NewsPaper in Ceylon  விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 50
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 19 முஹர்றம் 23 புதன்கிழமை [1-4-70]










## அவர் மீது வைத்த குறி

### அருகே நின்றவரை மாய்த்தது

கல்கத்தா, மார்ச் 31

மேற்கு வங்காள முன்னாள் உதவி முதன் மந்திரியும் இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்) கட்சியின் மேற்கு வங்கத்தலைவருமான திரு. ஜோதிபாசு இன்று காலை மயிரிழையில் உயிர் தப்பினார். கொலைகாரன் ஒருவன் அவரைக் கொல்வதற்கு வைத்த குறி தப்பியது. ஆனாலும் ஜோதிபாசுவுடன் கூட நின்ற ஒருவர் அத்துப்பாக்கிக் குண்டுக்குப்பலியானார். இக்கொலை சம்பந்தமாக சந்தேகத்தின் மீது சுரேந்திர பிரசாத் என்பவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுப் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

திரு. ஜோதிபாசு இன்று காலை பீகார் ராஜ்யத்தின் தலைநகரான பாட்னாவுக்குப் போய்ச் சேர்ந்தார் பாட்னா ரயில் நிலயத்தில் அவர் போய் இறங்கியதும் அவரை வரவேற்பதற்குப் பலர் அங்கு திரண்டிருந்தனர். ரயிலிலிருந்து இறங்கியதும் துப்பாக்கி வேட்டுச் சத்தம் ஒன்று கேட்டது. அடுத்த கணம் திரு. ஜோதிபாசுவின் அருகே நின்ற ஒருவர் சுருண்டு வீழுந்தார்.

திரு. ஜோதிபாசுவைக் கொலைசெய்ய நடந்த முயற்சி பற்றி உடனடியாகத் தீவிர விசாரணை மேற்கொள்வதற்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக இந்திய உள்துறை மந்திரி திரு. வை. பி. சவான் தெரிவித்தார்

திரு, ஜோதிபாசுவைக் கொலைசெய்யநடந்தமுயற்சி பற்றி பல்வேறு அரசியல் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளனர். ஒருவரைக் கொலைசெய்வதன் மூலம் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்திவிடமுடியாது என்று முன்னாள் வங்காள முதலமைச்சர் திரு. அஜோய் முக்கர்ஜி தெரிவித்தார்

இச்சம்பவம் குறித்து பிரதமர் திருமதி இந்திரா காந்தி அதிர்ச்சி தெரிவித்தார்

## அமைச்சின் நடவடிக்கை

கோட்டை, செவ்.

14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு பி சி சி தடுப்பு மருந்தைக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளைச்சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது

# இன, மத உணர்ச்சிகளை தூண்டுவோருக்கு எச்சரிக்கை

## கடும் நடவடிக்கை எடுக்க பொலிஸ் அதிபர் உத்தரவு

கொழும்பு, செவ்வாய்

வகுப்பு வாதத்தைத் தூண்டுவோர் எப்படிப்பட்ட செல்வாக்குடையவராகஇருந்தாலும் சரி, தற்பொழுதுள்ள சட்டத்தின்படி அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அறிவித்திருக்கிறார்.

அரசியல் வாதிகளால் பேசப்படும் வகுப்புவாத உணர்ச்சிகளை தூண்டகூடிய பேச்சுக்களை குறிப்பெடுக்கும்படியும். பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், பொலிஸாருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

இன, சமய பிரச்னைகளை கிளப்பும் அரசியல் வாதிகளின் நடவடிக்கைகளை அவதானிப்பதிலும், அவர்களின் பேச்சுக்களை குறிப்பெடுப்பதிலும், இரகசிய பொலிஸின் விசேஷ அரசியல் பிரிவினர் கவனம் செலுத்துவார்கள்.

இன, மத உணர்ச்சிகளை தூண்டிவிடக்கூடிய பேச்சுக்களை பேசும் அரசியல் வாதிகள், கண்காணிக்கப்படுவார்கள்.

## "திருக்குறள் தேசிய நூலாக வேண்டும்"

புதுடில்லி, மார்ச் 31

"இந்தியாவுக்குத்தேசியப் பறவை, தேசியச் சின்னம் ஆகியவை இருப்பதுபோல் ஒரு தேசிய நூலும் இருக்க வேண்டும். திருக்குறள் மாத்திரமே தேசிய நூலாகஇருப்பதற்கு தகுதியானது" என்று திரு. கந்தப்பன் கூறியுள்ளார்.

யாழ். ஐக்கியலாபநிதி பற்று வரவுடையோர் சங்கம்

## "பதிவு செய்யாதவர்களுக்கு எதுவும் கிடையாதுபோகும்'

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி பற்றுவரவுடையோர் சங்கப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது. 350க்கு மேலான பற்றுவரவுடையவர்கள் சமூகமாயிருந்தனர். உடும்பராய் திரு. [illegible] தம்பித்துரை கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். திரு. தம்பித்துரை தமது தலைமையுரையின் போது ஏப்ரல் 24-ந் திகதி யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோர்ட்டில் மேற்படி நிதி சம்பந்தமான வழக்கு விளக்கத்திற்கு எடுக்கப்படுமென்றும், அத்திகதிக்கு முன்ன மலாயன் இலங்கையர் சங்க மேல்அடுக்குக் கட்டித்தில் உடனடியாக வந்து பதிவு செய்துகொள்ள வேண்டுமென்றும், அத்துடன் விநியோகிக்கப்படும் படிவத்தைப் பெற்று முழுப் பெயரை எழுதி கையொப்பமிட்டு விலாசமும் எழுதி வழக்குத் தவணைக்கு முன் கொடுக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார்.

வேறு பிற காரணங்களை மனதில் வைத்துக்கொண்டு பதியாது இருக்கும் பற்றுவரவுடையோர்கள் நிதி பற்றிக் கூறிய தலை[illegible] பின்பு எப்போதாவது தமது வருமதிகளைத் திருப்பிப்

அண்மையில் டில்லித்

வட பகுதி அசைஸ் விசாரணை

## "எதிரிகள் இருவரும் என்னை சுட்டுவிட்டதாக கூறினேன்"

### வவுனியா கொலை முயற்சி வழக்கு

யாழ்ப்பாணம்,புதன்

என்னைசுட்டபிறகு டிராக்டர் சாரதி அங்கு வந்தார். அவரிடம் நாகலிங்கம், தருமலிங்கம் ஆகிய இருவரும் என்னை சுட்டுவிட்டதாக கூறினேன். என்னை ஓமந்தைக்கு கொண்டு போகும் படியும் சொன்னேன்.

வவனியா கொலை முயற்சி வழக்கில் எதிரின் வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சியமளித்த வேலுப்பிள்ளை பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் கலாநிதி சி. ஜி. வீரமந்திரி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. செந்தில்நாதன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வக்கேட் எல். டி குருசாமி ஆஜரானர்.

பாலசிங்கம் சட்சியமளிக்கையில் சம்பவம் நடைபெற்றபோது வேட்டி அணிந்திருந்ததாகவும் அதில் சன்ன அடையாளம் இருந்ததென்றும் கூறினார்.

எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வக்கேட் கே, வி. எஸ். சண்முகநாதன் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: உமக்கு பல எதிரிகள் உண்டு?-இல்லை.

வழ: பலருடன் நீர் நல்லாயில்லை?- அப்படியில்லை.

வழ: நீர் அப்பகுதியில் சண்டியன்மாதிரி இருந்தீர்? [illegible]றம் சாட்டப்பட்டீர்?- ஆம்

வழ: குற்றவாளியாக காணப்பட்டீர்?-ஆம்

வழ: என்ன தண்டனை கிடைத்தது?- நல்நடத்தை பிணை

வழ: கோபம் வந்ததும் கத்தியை பாவிப்பீர்?- சண்டைபிடிபடும்போது நடந்துவிட்டது.

வழ: உமது கத்தியா? ஆம்.

வழ: அவர்களை வெட்டியது உமது கத்தியால்? ஆம்

வழ: நீர் கமவிதானையாக கொஞ்சக்காலம் கடமையாற்றினீர்? ஆம்.

வழ: காரியாதிகாரி உமது வேலையை நிற்பாட்டினார்?- அவருக்கு இதில் தொடர்பில்லை.

உணவுப்பொருள் ஏற்றுமதி

## "மகாவலி திட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுக்களை குறிப்பெடுக்கும் படியும். பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், பொலி

களை பேசும் அரசியல் வாதிகள், கண்காணிக்கப்படுவார்கள்.

... வேண்டும். திருக்குறள் மாத்திரமே தேசிய நூலாகஇருப்பதற்கு தகுதியானது'' என்று திரு. கந்தப்பன் கூறியுள்ளார்.

அண்மையில் டில்லித் தமிழ்ச் சங்கத்தினுல் ஏற்பாடுசெய்த்ப்பட்ட கம்பர் விழாவின் இறுதிக்கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசுகையிலேயே மேற்கண்ட கருத்தை அவர் வலியுறுத்தினர்.

தார். திரு. தம்பித்துரை தமது தலைமையுரையின் ... யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோர்ட்டில் மேற்படி நிதி சம்பந்தமான வழக்கு விளக்கத்திற்கு எடுக்கப்படுமென்றும், அத்திகதிக்கு முன்னதாக இதுவரை பதிவு செய்யாத பற்றுவரவுடையவர்கள் தமது விபரங்களை ... புறுத்தினர்.

வேறு பிற காரணங்களை ... பதியாது இருக்கும் பற்றுவரவுடையோர்கள் நி... பற்றிக் கூறிய தலை... பின்பு எப்போதாவது தமது வருமதிகளைத் திருப்பிப் பெற அருகதையற்றவர்களாவார்கள் எனச் சொன்னார்.

... வேலுப்பிள்ளை பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் கலாநிதி சி. ஜி. வீரமந்திரி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் வவனியா பகுதியில் 68ம் ஆண்டு ஜனவரிமாதம் 8ம்தேதி கதிரவேலு நாகலிங்கம், கதிரவேலு தர்மலிங்கம் ஆகியோர் வேலுப்பிள்ளை பாலசிங்கத்தை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி, எஸ் சண்முகநாதன் ஆஜராளுர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் டபிள்யூ. எஸ் ... சியை குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: உமக்கு பல எதிரிகள் உண்டு?-இல்லை.

வழ: பலருடன் நீர் நல்லாயில்லை?- அப்படியில்லை.

வழ: நீர் அப்பகுதியில் சண்டியன்மாதிரி இருந்தீர்? இல்லை.

வழ: நீர் குற்றப்பட்டிருக்கிறீர்?- ஆம்.

வழ: ஐயம்பிள்ளை என்பவரை வெட்டியதாக வவனியா கோர்ட்டில் குற்றம் சாட்டப்பட்டீர்?-ஆம்

வழ: கத்தியால் காயம் விளைவித்தீர்?-ஆம்

வழ: 100 ரூபாநஷ்ட ஈடு கொடுததீர்?- ஆம்

வழ: வெறொருவழக்கில் பேரம்பலம் என்பவருக்கு காயம் விளைவித்ததாக குற்றது உமது கத்தியால்? ஆம்

வழ: நீர் கமவிதானையாக கொஞ்சக்காலம் கடமையாற்றினீர்? ஆம்.

வழ: காரியாதிகாரி உமது வேலையை நிற்பாட்டினுர்?- அவருக்கு இதில் தொடர்பில்லை.

வழ: நடராசா என்பவரை தாக்கினீரா?-இல்லை

வழ: கீழ் கோர்ட்டில் நடராசா என்பவரைத் தாக்கியதால் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டேன் என்றீரா? ஞாபகமில்லை.

வழ; உம்மிடம் லைசென்ஸ் துவக்கு இருக்கிறது? ஆம்

வழ: காரியாதிகாரி பாரமெடுத்தாரா?- இப்பவும் இருக்கிறது.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்,

உணவுப்பொருள் ஏற்றுமதி

# "மகாவலி திட்டம் நம்பிக்கை தருகிறது"

புலோலி, செவ்வாய்

''இன்றைய கல்வித் திட்டத்தில் விவசாய அறிவு புகுத்தப்பட்டிருப்பது மாணவர்கள் தமது கல்வியை முடித்துக்கொண்ட பின்னர் விவசாயத்தில் ஈடுபட வாய்ப்பாக உள்ளது. மகாவலி திசைதிருப்பம் எதிர்கால இளைஞர்களுக்கு உண்மையில் நல்லதொரு சந்தர்ப்பமாகும். பண்டைக் காலத்தில் வெளிநாடுகளுக்கு உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்த நாம் எதிர்காலத்திலும் அப்படியொரு நிலை வரும் என நம்புவதற்கு மகாவலித் திட்டம் நம்பிக்கையூட்டுகிறது. எதிர்காலத்தில் இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தை மகாவலித் திட்டம் நீக்கும்.''

இவ்வாறு மந்துவில் பாரதி வித்தியாலய புதிய கட்டிடத் திறப்புவிழாவில் பேசிய வரணி மகாவித்தியாலய அதிபர் திரு. வி. தங்கராசா கூறினர்.

இப்பகுதிப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடசாலையை ஆரம்பித்த நல்ல மாப்பாணர் உடையாரின் பெயரில் புதிய கட்டிடம் அமைக்கப்படுதலே பொருத்தமானதென அவர் சொன்னர்.

பதினையாயிரம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட அப்புதிய கட்டிடத்தை திரு. வ. ந. நவரத்தினம் திறந்துவைத்துப் பேசுகையில், பாடசாலைகளில் போதிய கட்டிட வசதி இல்லாமையால் அரசாங்கம்

(4-ம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகள் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் யாழ்ப்பாணம் மலாயாகபே மேல்மாடியில் நடைபெறவிருக்கிறது, இக் கூட்டத்தில் சர்வகட்சி பொது மகாநாடுபற்றிய ஆலோசனை முக்கிய இடம் பெறுமென்று இணைச் செயலாளர்கள் தெரிவித்தனர்.

மக்கள் முன்னணியினரும் வேலையற்ற ஏனைய வாலிபர் சம்மேளனத்தினரும் இக் கூட்டத்துக்குஅழைக்கப்பட்டுள்ளனர்.

# 25000 தொழிலாளரை வெளியேற்ற முடிவு

கொழும்பு, செவ்,

இலங்கைவாழ் இந்திய வம்சாவழியினரைச் சேர்ந்த 25000 தோட்டத் தொழிலாளர்களை ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தப் பிரகாரம் வெளியேற்ற குடியேற்ற இலாகா முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது,

இந்தத் தொழிலாளர்களுள் 6200 பேர் பண்டாரவளைப்பகுதியில் உள்ள தோட்டங்களைச் சேர்ந்தவர்கள், 300 பேர் பதுளை பசறைப் பகுதியைச் சேர்ந்தவர்கள்,

இம்மாத இறுதிக்குள் இவர்களையெல்லாம் வெளியேற்றுவதற்கான முடிவுகளை குடியேற்ற வெளியேற்ற இலாகா மேற்கொண்டுள்ளது,

## உதவி ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை உதவியாசிரியர் சங்கம் என்னும் பெயரில் புதிய ஆசிரியர் சங்கம் ஒன்று உதயமாகவிருக்கிறது. சாதி, மத. மொழி வேறுபாடற்றமுறையில் இச் சங்கம் இயங்கும் என்றும் உதவி ஆசிரியர்களின் நலன்களைப்பாதுகாப்பதற்கு இது உழைக்குமென்றும் காரியதரிசி திரு. ஆ. மார்ட்டின் தெரிவித்தார்.

இதற்கான ஆலோசனைக் கூட்டமொன்றும் வருகிற 4-ந் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது, மலாயன் கபே மேல்மாடியில் நடைபெறும் இக்கூட்டத்துக்கு திரு கு. செல்லத்துரை தலைமை வகிப்பார்,

# வானெலியில் தேர்தல் பிரசாரத்துக்கு அனுமதி?

## பிரதமருடன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் பேச்சுவார்த்தை

கொழும்பு, செவ்வாய்

இலங்கையின் 6வது ஆட்சி மன்றத் தேர்தலின்போது இலங்கையிலுள்ள எல்லாக் கட்சிகளும் தத்தம் கொள்கைகள், திட்டங்கள் என்பனவற்றைப் பற்றிப் பொது மக்களுக்கு விளக்குவதற்கு இலங்கை வானெலியில் சந்தர்ப்பம் கொடுக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முடிவுசெய்துள்ளதாக அறியப்படுகிறது.

இதுபற்றிய தீர்க்கமான முடிவை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிபர் திரு. நெவில் ஜெயவீரா பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவைச் சந்தித்து ஆலோசித்த பின்னர் முடிவு செய்வார்.

இவ்வாறு சர்வ கட்சிகளும் தத்தம் தேர்தல் விஞ்ஞாபனத்தை மக்களுக்கு ஒலிபரப்புவதற்கான சந்தர்ப்பத்தை டாக்டர் டபிள்யு: தஹநாயக்கா பிரதமராக இருந்தபோது 1960ம ஆண்டில் வழங்கியிருந்தார்.

திரு: தஹநாயக்காவின் வழியைப் பின்பற்றி இச் சந்தர்ப்பத்தை வழங்கப் பிரதமர் இசைவாரென அறியப்படுகிறது.

# 3000 பட்டதாரிகளுக்கு மாணவ ஆசிரியர் பதவி

கோட்டை செவ்

இலங்கைபட்டதாரிமாணவர்கள் 3000 பேருக்கு அரசாங்கம் மாணவ ஆசிரியர் வேலை வழங்க முடிவு செய்துள்ளது, இவர்களுக்கு மாத வேதனமாக ரூபா200 வழங்குவதென்றுதீர்மானித்துள்ளது. பட்டதாரி மாணவ ஆசிரியர்களுக்கான விண்ணப்பம்பற்றிய விபரம் கடந்த 26-ம் திகதி வெளியிடப்பட்ட அரசாங்கவர்த்தமானியில் ஏற்கனவே பிரசுரமாகியிருக்கின்றது, இம் மாதம் 10-ம் திகதியேவிண்ணப்பம் செய்வதற்கான இறுதித் தினமாகும்,

நேர்முகப் பரீட்சை அவ்வப் பிராந்திய கல்விக் கந்தோர்களில் கல்வியதிபர் கல்வியதிகாரிகள் முன்னிலையில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது,

## முஸ்லிம் சிறுவர்களின் 6வது விழா

யாழ்ப்பாணம், புதன்

''யாழ்ப்பாண இஸ்லாமிய சிறுவர்களுடைய விளையாட்டுத்துறை விருத்தியடைவதற்கு ஒரு விளையாட்டு மைதானம் அவசியம் தேவை. இதனுல் தற்போதுள்ள முன்னேற்றம் விருத்தியடைவதற்கு அனுகூலம் ஏற்படும்'' என யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர் ஜனுப் எம்.ஜி பஷீர் நேற்று யாழ்ப்பாண முஸ்லிம் சிறுவர்களின் 6வது விளையாட்டுப் போட்டியையொட்டி நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

இக்கூட்டத்திற்கு முன்னுள் யாழ்ப்பாண மேயர் குவாசி எம். எம். சுல்தான் தலைமை வகித்தார். காதி அபூபக்கர் வீதியிலுள்ள தைக்காபள்ளி வாசலுக்கு அருகாமையில் நடைபெற்ற இக்கூட்டத்தின்போது விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. சம்மாந்துறை காரியாதிகாரி ஜனுப் மக்பூல் இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தனராகபங்குபற்றினுர்

## பெல்சியத்தில் ரஷ்ய உளவாளி

பெல்சியம்மார்ச்,31

பெல்சியத்தில் உளவு பார்க்க முயன்றதாக ரஷ்யர் ஒருவர் பெல்சியம் பாதுகாப்புப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார், 36 வயதான இவரை கைது செய்தபோது இவரிடம் சிறிய கைக்கமரு ஒன்றும் ஏராளமான பணமும் காணப்பட்டதம்,

வல்வை கடற்கரையில்

# ரூ. 2 லட்சம் பொருட்களுடன் படகு கைப்பற்றப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

வல்வெட்டித்துறைக்கடற்கரைப் பகுதியில் நேற்றுச் சுமார் 2 லட்சம் பெறுதியான பொருட்களுடன் யந்திரப்படகொன்றை கடற்படையினர் கைப்பற்றி சந்தேகத்தின் பேரில் அப்படகிலிருந்த 6 பேரையும் கைது செய்தனர்

இப்படகில் டிரான்சிஸ்டர் ரேடியோ உதிரிபாகங்கள், உயர்ந்தரக சேலைகள், பித்தளைப்பாத்திரங்கள். பவுடர் ரின்கள், சவுக்காரங்கள் முதலியன காணப்பட்டன. கடற்படையைச் சேர்ந்த திரு. தர்மசேனு இவற்றைக் கைப்பற்றினுர்.

கச்சேரி காரியாலய உதவியாளரும், உப-சுங்க கலக்டருமான திரு. கே. கந்தசாமி விசாரணை நடாத்தி யந்திரப்படகையும் சமான்களையும் பறிமுதல்செய்யும்படி உத்தரவிட்டார்.

படகைச் செலுத்தியவருக்கு 750 ரூபாவும் மற்றும் 5 பேருக்கும் தலா 300 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது (கு வி ம)

# கொலை பற்றிய தகவல்களை பொலிஸாருக்கு கூறுங்கள்

## அஞ்சலி கூட்டத்தில் முன்னுள் எம். பி.

யாழ்ப்பாணம், புதன்

'' 'ஐயா' கொலைபற்றி உங்களுக்கு தெரிந்தவற்றையும் மறைக்காது உடனடியாக பொலிசாருக்கு தெரிவியுங்கள். எவ்வித அச்சமுமின்றி உங்களுக்கு கிடைக்கும் தகவல்களை உடனடியாக பொலிசாருக்கு அறிவியுங்கள். இதுவே நீங்கள் மறைந்த ஐயாவுக்குச் செய்யும் கைமாருகும்.''

கொடிகாமம் சந்தையில் நேற்றிரவு நடந்த மறைந்த பஸ் சாரதி சின்னப்பொடி வேலுவின் அஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமைதாங்கிய முன்னுள் சாவகச்சேரி எம்.

(4-ம் பக்கம் பார்க்க)

# "ஈழநாடு"

## பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் 'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறேம்.

### உதவி வழங்கியோர்:

| | |
|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | 8297-47 |
| அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை | 27-35 |
| செ. செல்வராஜன் மணிக்கூட்டுவீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம். | 2-00 |
| சாவாச்சேரி சுகாதாரக்கந்தோர் அலுவலக ஊழியர் | 116-00 |
| அனுதாபி, உரும்பிராய் | 5-00 |
| ம. சிதம்பரப்பிள்ளை, 23, கச்சேரி, நல்லூர். காசுக்கட்டளை | 10-00 |
| அகில இலங்கை கடதாசி வர்த்தக சங்கம் (காசோலை) | 220-00 |
| இலங்கை போக்குவரத்துச்சபை, பருத்தித்துறை டிப்போ ஊழியர்கள் சேர்த்து உதவியது | 315-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மாவிட்டபுரம் வாளித் தொழிற்சாலைக்கு தென்புறமாகவுள்ள 2வது காணி (பிரதான வீதியில்) 4 1/2 பரப்பு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ச. சின்னத்துரை, பிரதான வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 1963

கடை:

யாழ்ப்பாணம் பெரிய கடை ஆஸ்பத்திரி வீதியில் பெரிய வியாபார நிலையம் விற்பனைக்கு உண்டு. கடிதம் மூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல. 1964, மே/பா 'ஈழநாடு' லிமிட்டட், யாழ்ப்பாணம். 1964

நல்ல நிலைமையிலுள்ள A/50 ஆஸ்டின் என்ஜின், வால்வுகள், கெட், எண்ணை பம்பு முதலியன விற்பனைக்கு உண்டு. பி. ப. 6-00 மணிக்குப் பின் கீழ்க்காணும் விலாசத்தில் சந்திக்கவும். கே. இரத்தினசிங்கம், 16, அனுறயாவத்தை, அன்டேசன் ரேட் அருகாமை, தெகிவளை. 1958


## புதிய கட்சி

யாழ்ப்பாணம், புதன்

சட்டவாதிகள் சிலரின் முயற்சியால் 'அகில இலங்கை ஜனநாயக சம உரிமைக் கட்சி' எனும் பெயரில் ஒரு கட்சி கந்தரோடையில் ஸ்தாபிக்கப்பட்டது.

எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கட்சியின் அமைப்புக் கூட்டம் கந்தரோடையில் நடைபெற்றது.

கட்சியின் தலைவராக வழக்கறிஞர் திரு வெ. செல்லத்துரையும், பொதுக் காரியதரிசியாக வழக்கறிஞர் திரு. பொ. காங்கேயனும், தனாதிகாரியாக திரு வி. எஸ், பொன்னுத்துரை அமைப்புக்குழு உறுப்பினர்களாக நியாயதுரந்தர் திரு. எஸ். சிவபாக்கியநாதன், திரு. சோமசுந்தரம், திரு. எஸ். குமாரசுவாமி, திரு. பொ. நவரத்தினம், வித்துவான் சி. கணேசன், வழக்கறிஞர் வி. எஸ். நாதன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.


### ஏலவிற்பனை

வெள்ளாந்தெரு 10 நிர். கடையிலிருக்கும் சி. முத்துக்குமாரு அவர்களிடம் 1-1-67 முதல் 31-12-67ஆம் திகதி முடிய அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் மேற்படி கடையில் 1970-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். 2020

### வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30 10-00
பிறிபோயா, போயா 2-30 மணி
எம் ஜி ஆர் - அஞ்சலிதேவி நடித்த
சர்வாதிகாரி

### ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிபோயா, போயா 2-30
சிவாஜி - ஜெயலலிதா நடித்த
எங்க ஊர் ராஜா

Now showing
### MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p m
Poya & Public holidays
4 Shows
Gig Young, Carol Lynley
in
THE SHUTTERED ROOM
(Color-adults only)
Sleep one night in the house with the shuttered room and you may never want to sleep again.
தாழ்பட்ட அறைக்குள் ஓர்இரவு நடக்கும் திகில் நிறைந்த சம்பவம்.

### REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Lex Barker
Ann Smyrrner
in
CODE 7 VICTIM 5

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த
### ஹரிச்சந்திரா


# இன்றைய பலன்

பங்குனி மாதம் 19-ம் திகதி [1-4-70]

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்**- வாகன சொந்தக்காரர்களுக்கு சிறப்பான தினம். ஆசிரியர்கள் வாழ்க்கையில் போற்றப்படுவார்கள். மாணவர்களாயின் கல்வித்துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு. பொதுத்துறைகளிலும் நாட்டம் பிறக்கும்.

**ரிஷபம்**- வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளமாகும். தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். இன்று சுபநாள்.

**மிதுனம்**- அதிகாரக்குறைவுக்கு இடமுண்டு. அபாயகரமான தொழில்களில் ஈடுபடுபவர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும், குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். அவசர நடவடிக்கையைத் தவிர்க்கவும்.

**கடகம்**- கனிவான சம்பவங்கள் நடைபெறும். காதலர்களுக்கு கனகுஷியான தினம். சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறும்.

**சிம்மம்**- ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராத விதமாக சிக்கலில் மாட்டிக்கொள்ளநேரிடும். உள்ளக்கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும். நிதானம் வேண்டும்:

**கன்னி**- நீண்டநாள் கனவு இன்று நனவாகும். பெரியவர்கள் உதவிக்கு வருவர். புண்ணியவிருப்பு மேலிடும்.

**துலாம்**- கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும். எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றிகாண்பீர்கள். சிலருக்கு நன்மையான இடமாற்றம் ஏற்படலாம் தெய்வத்தின் துணையுமுண்டு.

**விருட்சிகம்**- புதிய தொழில்கள் மூலம் இலாபம் கிடைக்கும். புத்திரர்களுடைய செல்வாக்குப் பெருகும். புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும். பூமியால் முன்னேற்றமும் உண்டு.

**தனுசு**- அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும். உடல்நலம் பாதிக்கப்படலாம். வீணைபொருள்களினால் பணம் விரயமாகலாம்- அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை.

**மகரம்**- எக்கருமத்தையும் எண்ணித்துணிக. அவசரப் போக்கினால் அருமையானசந்தர்ப்பத்தைகோட்டைவிடக்கூடும்: வணிகர்களாயின் அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும், நிதானம்வேண்டும்,

**கும்பம்**- இதயப்படுதாவில் இன்பக்கூத்து. வாழ்க்கை சில காரியங்கள் நிறைந்ததாக இருக்கும். கற்றதனால் பயன் இன்று கைமேல் கிடைக்கும். நுட்பமான வேலைகளில் ஈடுபடுவார்கள். போற்றப்படுவார்கள்.

**மீனம்**- உறவுமுறைகளில் பிளவுகளே தென்படும், மனதில் உற்சாகம் குன்றும் அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும். இனத்தவர்களுடன் பகைத்துக்கொளவீர்கள்.

## வலி. மேற்கு தமிழாசிரியர் சங்க பேச்சுப் போட்டி

சுழிபுரம், செவ்வாய்

வலிகாமம் மேற்கு தமிழாசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டி பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. போட்டிக்கு சங்க உபதலைவர் திரு செ. ஸ்ரீநிவாசன் தலைமை வகித்தார். பண்டிதர் க. மயில்வாகனம் பேச்சுப்போட்டி குறிப்பை எடுத்துரைத்தார், சங்க காரியதரிசி அ. தா. பொன்னையா நன்றியுரை கூறினார் பேச்சுப்போட்டி முடிவுகள்: ... ப ஜெயலட்சுமி சண்டிலிப்பாய் வாணி நிகேதனம், க சந்திரலீலா சண்டிலிப்பாய் வாணி நிகேதனம், க சரோஜாமலர் வட்டு. திருநாவுக்கரசு வித்தியாசாலை.

மேற்பிரிவு ஆண்கள்: மு பாலசுப்பிரமணியம் பண்ணாகம் மெய்கண்டான், வை விஜயரத்தினம் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, ஆ இரகுப்பிள்ளை பண்ணாகம்மெய்கண்டான்.

பெண்கள்: பொ இராஜநாயகி பண்ணாகம் மெய்கண்

ஆசிரியருக்குக் கடிதம்

# வடக்கு வளம் பெற...

மகாவலி திருப்பு வேலை ஆரம்பிக்கப்பட்டது ஆனால் அது வடக்கே வர எத்தனை காலமாகுமோ? கங்கையின் வரவால் வடக்கு வளம் பெறுமென்று காத்துக்கொண்டிருப்பது புளியம் விதைநட்டுக் கடன்தீர்க்கும் கதையாகத்தான் இருக்கும். எங்கிருந்தோ என்றைக்கோ வரும் கங்கையை நம்பிக் காலம் கடத்தலாமா?

வற்றாதவாவிகள் எனத் திகழும் நிலாவரை போன்ற கிணறுகள் வடக்கில்பலஇடங்களிலும் இருக்கின்றன. இவற்றைச் சீர்செய்வதன் மூலம் பெருந்தொகையான நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிசெய்யலாம். பயனற்று உபயோகிக்கப் படாமலிருக்கும் இக்கிணறுகள் மூலம் வடபகுதி விவசாயிகளுக்கு நீரைவழங்குவதால் வடபகுதியில்விவசாயச்செய்கை மேலும் வளர்ச்சியடையும்.

மேற்படி கிணறுகள் பற்றிய குறிப்புகளைச் சேகரித்து அரசாங்கத்தின் கவனத்திற்கு இவற்றைக் கொண்டு வருதன் மூலம் இக்கிணறுகளை அபிவிருத்தி செய்யலாம் இது விஷயத்தில் நம் தமிழ் எம். பிக்கள் சிரத்தை எடுப்பார்களானால் நாம் அதிக பயனை எதிர்பார்க்க முடியும். தம்முள் வேற்றுமைகளை மறந்து வடபகுதியின் நன்மையைக் கருதி இதுபற்றி ஆவன செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

வடபகுதியின் வளம் நம் தமிழ் எம். பிக்களின் கையில் தான் தங்கியுள்ளது

இ. பெர்னாட்
இளவாலை

## 19-வது ஆண்டு இசைவிழா

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சனசபாவின் 19-வது ஆண்டு இசைவிழா இம்மாதம் 17-ந் திகதி மேற்படி இசைவிழா மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. 17-ந் திகதி தொடக்கம் 24-ந் திகதி வரை விழா தொடர்ந்து நடைபெறும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 1—4—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

## கருணாநிதி தலைமையில் திருமணம்

வலங்கைமான், மார்ச் 31

சட்டமன்ற தி. மு. கழக உறுப்பினர் சோமசுந்தரத்தின் மகள் ரஷியாவுக்கு நேற்றுமுன்தினம் திருமணம் நடந்தது. முதலமைச்சர் திரு. கருணாநிதி தலைமை தாங்கி திருமணம் நடத்தி வைத்தார். ரஷியாவின் கணவரான ஜெயராஜ் ஒரு டாக்டராவார்.

'சுயமரியாதைத் திருமணம் நடக்கிறது' என்பதில் இனிமேல் வியப்பு ஏற்படாது. பழைய காலத்துத் திருமணம் நடைபெறுகிறது என்றால்தான் வியப்பும் வேதனையும் ஏற்படுகிறது' என்று முதலமைச்சர் கருணாநிதி கூறினார்,

.........

## புத்தளம் சங்கீத நடனசபா

புத்தளம், செவ்.

புத்தளம் சங்கீத நடன சபாவின் வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் புது வருட உத்தியோகஸ்தராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: ஜனாப் ஐ ஏ நெய்னாமரைக்கார், உபதலைவர் ஜனாப் என் எஸ் ஏ காதர், காரியதரிசி: ஜனாப் ஏ என் எஸ் நியாஸ், தனாதிகாரி: ஜனாப் எஸ் ஏ சேகு நெயினா, கணக்காளர்: ஜனாப் ஏ ஜமால்டீன். விசேட அங்கத்தவர்கள்: ஜனாப்கள் என் ஏ எம் ஐதுருஸ் மரைக்கார், எஸ், றஷீட்.

திறந்த வெளியரங்கில்ஒரு விசேஷ சங்கீதப் போட்டி நடத்துவதென்றும் வெளியூர்க்கோஷ்டிகளும் இதில் பங்குபற்றவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## பதில் இல்லையாம்

வேலணை, செவ்வாய்

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லும் பஸ் அல்லைப்பிட்டி சந்தியிலிருந்து அல்லைப்பிட்டிக்குச் சென்று பின் அல்லைப்பிட்டிச் சந்தியையடைந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லவும். மண்கும்பான் சாட்டியூடாக பஸ்சேவை நடைபெறச் செய்யும்படியும் சம்பந்தப்பட்ட இ.போ.ச. அதிகாரியை தீவுப்பகுதி பிரயாணிகள் சங்கம் கோரி

# செய்திச் சுருக்கம்

மென்பந்துகிறிக்கெற்

## இன்னிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

தோல்வியை பல காலம் அறியாத இணுவில்ரேசஸை 'ஸ்பாக்ளிங்றெட்ஸ்' இனிங்சால் வென்றது. முதலில் துடுப்பெடுத்தாடியரேசஸ், பாலகுமாரின் பந்து வீச்சுக்கு துடுப்பெடுத்தாட முடியாது 31 ஓட்டங்களுடன் ஆட்டத்தை முடித்தது. இதற்குப் பதிலடியாக ஸ்பாக்ளிங் றெட்ஸ் 9 விக்கற் நஷ்டத்திற்கு 153 ஓட்டங்கள் பெற்று ஆட்டத்தை நிறுத்தியது. இதில் விபுலானந்தன், வசந்தன், அசோகன் ஆகியோர் அபாரமாகத் துடுப்பெடுத்தாடினர். ரேசஸ் இரண்டாவது இனிங்சில் வசந்தனின் பந்து வீச்சினாலும் விக்னேஸ்வரனின் பந்துதடுப்புத் தீரத்தினாலும் 65 ஓட்டங்களைப் பெற்றது. இவ் வாட்டம் இணுவிலில் நடைபெற்றது.

## தமிழ் மொழித் தினவிழா

கொடிகாமம், செவ்வாய்

மட்டுவில் தெற்கு அ.மி. கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் தமிழ் மொழித் தினவிழா பாடசாலைஅதிபர் திரு செ வல்லிபுரம் தலைமையில் கொண்டாடப்பட்டது. பாஓதல் சொற்பொழிவு, கட்டுரை, உரத்துவாசித்தல், உறுப்பெழுத்து, சொல்வதெழுதல் ஆகிய பகுதிகளில் பாடசாலை இடைநிலைப் போட்டி பல மத்தியஸ்தர் மத்தியில் நடைபெற்றன.

## கிருமிநாசினி தெளித்தவர் மரணம்

புலோலி, செவ்வாய்

உடுப்பிட்டியைச் சேர்ந்த கொம்பாந்தறை என்னுமிடத்தைச் சேர்ந்த எஸ். நடராசா என்னும் 18வயது இளைஞர் தனது தோட்டத்தில் புகையிலைக்குக் கிருமிநாசினி தெளித்துவிட்டு வீடு வந்தபொழுதுமயக்கமடைந்தார். மந்திகை ஆஸ்பத்திரிக்குளடுத்துச்செல்லப்பட்ட இவர் அடுத்தநாள் அங்கு மரணமானார்.

இவரின் மரணத்தையிட்டு நடந்த மரணவிசாரணையில் ஆஸ்பத்திரி டாக்டர் செல்வி பி. சின்னப்பா சாட்சியமளிக்

## இலங்கை எதிர்ப்பு தெரிவித்துள்ளது

ஐக்கிய அமெரிக்கா தனது இரப்பர் இருப்பிலிருந்து 169,000 தொன் இரப்பரை வெளியிடத் தீர்மானித்துள்ளது. இதையிட்டு இலங்கை அரசாங்கம் உத்தியோக பூர்வமாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

0 0 0

## தேர்தல் காலத்துக்கு மேலும் 2000 பொலிசார்

பொதுத் தேர்தல் காதத்தில் கடமையாற்றுவதற்கென சுமார் இரண்டாயிரம் விசேட பொலிசார் சேவைக்கு அழைக்கப்படுவர். இவர்கள் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். ஏப்ரல் 23-ந் திகதி முதல் பொதுத் தேர்தல்தினமான மே 27-ம் திகதி வரை கடமையாற்றுவர்.

0 0 0

## வாகன இலக்கங்கள் தாக்கல்

தேர்தல் பிரசாரத்தின் போது அபேட்சகர்களும் அவர்களுடைய ஏஜண்டுகளும் உபயோகிக்கும் வாகனங்களின் இலக்கங்களை அவர்கள் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்த தினத்திலிருந்து ஒரு வாரத்திற்குள் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும். இந்தக் குறிப்பிட்ட வாகனங்கள் தேர்தற் சட்டத்திற்கு முரணாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதைப் பொலிசார் கண்காணிப்பதற்காகவே இவ் வாகனங்களின் இலக்கங்கள் நியமனப் பத்திரங்களில் தாக்கல் செய்ய வேண்டுமென அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

0 0 0

## தண்ணீர் தட்டுப்பாடு

தொடர்ந்து எறித்து வரும் வெய்யில் வெப்பத்தினால் கொஸ்லாந்தை நகரில் குடிநீருக்குப் பெருந் தட்டுப்பாடு எற்பட்டுள்ளது.

0 0 0

## அதிக அளவு பி. வெங்காயம்

புத்தாண்டை முன்னிட்டு உணவு இலாகா 7500 தொன் பம்பாய் வெங்காயம் இறக்குமதி செய்துள்ளது. இத்தொகை ஒரு மாதத்துக்கு தேவையான

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(யாழ்ப்பாணம்) சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
தினசரி 4 காட்சிகள் நம்பியார் - தங்கவேலு
நடித்த

## ஹரிச்சந்திரா

ராணி ஜெய்சங்கர் (3 வேடங்களில்)
(யாழ்ப்பாணம்) விஜயநிர்மலா - பாலையா
தினசரி 3 காட்சிகள் நடித்த

## சிரித்த முகம்

வின்ஸர் சிவாஜி—சரோஜாதேவி
(யாழ்ப்பாணம்) —சௌகார் ஜானகி
தினசரி 4 காட்சிகள் நடித்த

## புதிய பறவை

வெற்றிகரமான 2 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
(போயா, பிரிப்போயா காலை 10-30)

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்




சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்,
ஏ. வி. எம். ராஜன் மனோரமா
மற்றுபலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்

## தில்லானா மோகனம்பாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)
ஆகிய திரைகளில்
முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்
ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணாநிதி
நடித்த
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

## சுபதினம்


...லைவர் திரு செ. ஸ்ரீநிவாசன் தலைமை வகித்தார். பண்டிதர் க. மயில்வாகனம் பேச்சுப்போட்டி குறிப்பை எடுத்துரைத்தார், சங்க காரியதரிசி அ. தா. பொன்னையா நன்றியுரை கூறினர்.

பேச்சுப்போட்டி முடிவுகள்:

கீழ்ப்பிரிவு ஆண்கள்:

ஐ தேவானந்தன், வட்டு. திருநாவுக்கரசு வித்தியாசாலை, ந மகேந்திரலிங்கம் சண்டிலிப்பாய் வாணி நிகேதமை, க சிறிபாலகுமார் வட்டு. திருநாவுக்கரசு வித்தியாசாலை.

பெண்கள்: ப இராசலட்சுமி சண்டிலிப்பாய் வாணி நிகேதனம், டா சந்திரவதனி வட்டு. திருநாவுக்கரசு வித்தியாசாலை, பா இலட்சுமிதேவி வட்டு. திருநாவுக்கரசு வித்தியாசாலை.

மத்திய பிரிவு ஆண்கள்: நா தவராசா வட்டு. திருநாவுக்கரசு வித்தியாசாலை, க நாகேந்திரராசா பண்ணாகம் மெய்கண்டான், இ ஜெயமோகன் பிளவத்தை அ மி பாடசாலை.

பெண்கள்: ந நாகேஸ்வரி பண்ணாகம் மெய்கண்டான்.

...பாலசுப்பிரமணியம் பண்ணாகம் மெய்கண்டான், வை விஜயரத்தினம் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, ஆ இரகுப்பிள்ளை பண்ணாகம்மெய்கண்டான்.

பெண்கள்; பொ இராஜநாயகி பண்ணாகம் மெய்கண்டான், ச விஜயராணி ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசலை, ச பவானி பண்ணாகம் மெய்கண்டான்.

—

## காரியதரிசிகள் பதவியிலிருப்பர்

கொழும்பு, செவ்.

புதிய அரசாங்கம் அமைக்கப்படும்வரை ஆட்சிமன்றத்தின் நிரந்தரக் காரியதரிசிகள் தங்கள் பதவியிலிருப்பரென திறைசேரி காரியதரிசி திரு. எம். இராஜேந்திரா தெரிவித்துள்ளார்

ஆட்சிமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் மேற்படி காரியதரிசிகள் பதவியிலிருக்கிறார்களே அவர்களின் நிலையென்ன? என திறைசேரியுடன் கலந்தாலோசிக்கப்பட்டபோது திரு. இராஜேந்திரா மேற்கண்டவாறு தெரிவித்தார். 'அரசியல் அமைப்புத் திட்டத்தின்கீழ் ஆட்சிமன்றக் காரியதரிசிகள் ஆட்சிமன்றத்திலோ அல்லது செனட்சபையிலோ அங்கத்துவம் வகிக்காமல் நான்கு மாதங்களுக்குத் தங்கள் பதவியில் இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்

## வதிரி டயமன்ட் வெற்றி

உடுப்பிட்டி, செவ்வாய்

உடுப்பிட்டிக் காரியாதிகாரி பிரிவிற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வதிரி டயமன்ட் விளையாட்டுக் கழகத்திற்கும் கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் உதைபந்தாட்ட மோதல் ஏற்பட்டது.

மிகவும் விறுவிறுப்பான முறையில் நடைபெற்ற இப்போட்டியில் ஆரம்பத்தில் காணப்பட்ட 'சூடு' கடைசியில் இருக்கவில்லை. வதிரி டயமண்ட் வீரர்கள் ச. இரத்தினசேகரன், இரா. யோகராசா, சி. மகேந்திரன் ஆகியோரின் விளையாட்டு மிகவும் பாராட்டக்கூடியதாகவிருந்தது. வதிரி கோஷ்டி முன்னணி வீரர்கள் யோகராசா 3 கோல்களையும், சி மகேந்திரன் 1 கோலையும் போட்டுச் சபாஷ் பெற்றுக் கொண்டனர்.

கரவெட்டி ஸ்பேஸ் கழக வீரர் ஸ்ரீதரனின் அபார விளையாட்டுஉதைபந்தாட்ட இரசிகர்களுக்கு ஒரு விருந்தாக அமைந்தது. இப்போட்டியில் வதிரி டயமன்ட் வீரர்கள் 4—1 கோல் களால் வெற்றியீட்டினர். வதிரி டயமண்ட் கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. எஸ். சிவதயாபரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 1—4—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவு, 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச் சுருக்கம்.

**334 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச் சுருக்கம். 4-28 கல்வி ஒலிபரப்பு, 5.00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள்.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வீணை, 7-45 விளையாட்டு, 8 00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 கலைக்கோலம், 10 00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

—

## கல்லூரி ஆசிரியர் சங்கம்

உடுப்பிட்டி, செவ்வாய்

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியின் ஆசிரியர் சங்கக் கூட்டம் கல்லூரி மண்டபத்தில் திரு. சி. திரவியம் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஆ. டே. போல், காரியதரிசி: திரு ஜே. எஸ். கிறிஸ்ததாஸ், தனாதிகாரி: திரு. ஆர். எஸ். செல்லத்துரை.

...டிக்குச் சென்று பின் அல்லைப்பிட்டிச் சந்தியையடைந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லவும். மண்கும்பான் சாட்டியூடாக பஸ்சேவை நடைபெறச் செய்யும்படியும் சம்பந்தப்பட்ட இ.போ ச. அதிகாரியை தீவுப்பகுதி பிரயாணிகள் சங்கம் கோரியும் எவ்விதத்திலும் கிடைக்கவில்லையென்பது தெரிகிறது.

## சுற்றுலா முடித்தனர்

உடுப்பிட்டி, செவ்வாய்

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் திருவாளர்கள் சி. திரவியம், கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை, ஜே. எஸ். கிறிஸ்ததாஸ் ஆகியோரின் மேற்பார்வையில் அகில இலங்கை சுற்றுப்பிரயாணம் மேற்கொண்ட 50 உயர் வகுப்பு மாணவர்கள் மீண்டும் கல்லூரி வந்தடைந்தனர்.

## டாக்டர் நியமனம்

ஊரதீவு, செவ்வாய்

அனலைதீவு ஆஸ்பத்திரிக்கு டாக்டர் தனபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இம்மாதம் 21-ந் திகதி நியமிக்கப்பட்ட டாக்டர் சண்முகநாதன் பதவி ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து அவரது இடத்துக்கு டாக்டர் தனபலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

டாக்டர் தனபாலன் முன்னர் எல்பிட்டியாவில் இருந்தவர்.

## தற்கொலை

உடுப்பிட்டி, செவ்வாய்

அல்வாய் தெற்கு, குழந்தை வளவு என்னும்இடத்தைச் சேர்ந்த வைரமுத்து கந்தசாமி (வயது 28) என்பவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

காலஞ்சென்றவர் இறப்பதற்கு முன்தினம் தன் நண்பர்களிடம் மறுநாள் கலியாணவீடு நடத்தப்போவதாகக் கூறித் திரிந்தாராம்,

மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

...நாசினி தெளித்துவிட்டு வீடு வந்தபொழுது மயக்கமடைந்தார். மந்திகை ஆஸ்பத்திரிக்குஎடுத்துச்செல்லப்பட்ட இவர் அடுத்தநாள் அங்கு மரணமானார்.

இவரின் மரணத்தையிட்டு நடந்த மரணவிசாரணையில் ஆஸ்பத்திரி டாக்டர் செல்வி பி. சின்னப்பா சாட்சியமளிக்கையில், நச்சுத்தன்மை உள்ளஒருவித 'காஸ்' மூலம் சுவாசப்பை முதலியன தாக்கப்பட்டு இறக்கநேரிட்டதென கூறினார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் தற்செயல் மரணமென தீர்ப்பளித்தார்.

—

## பஸ்ஸில் நண்டுகள் ஊர்வலம்

புத்தளம், செவ்வாய்

புத்தளத்தில் இருந்து கண்டியை நோக்கி பஸ்வண்டி போய்க் கொண்டிருந்தது. சாரதி திடீரென்று பஸ்ஸை நிறுத்தி என் காலில் தேள் கொட்டிவிட்டது என்றார். எல்லோரும் காலைஉயர்த்திப் பார்த்தபோது அங்கு நண்டுகள் பவனி வந்துகொண்டிருந்தன.

அவற்றிற்குரியவர் யார் என்று விசாரித்தபோது உரிமைபாராட்டி யாரும் வரவில்லை. பஸ்ஸுக்குள் இருந்தவர்கள் ஒன்றிரண்டு என்று அவற்றைப்பொறுக்கி எடுத்தனர்.

## ஜேர்மன் அன்பளிப்பு

கோட்டை, புதன்

3000 ரூபா பெறுமதியான கையுறைகளை ஜேர்மனி இலங்கைப் பாடசாலைகள் குத்துச் சண்டை சங்கத்துக்கு அன்பளிப்புச் செய்யவிருக்கிறது. இந்த அன்பளிப்பு வைபவம் இன்று விவசாயப்பகுதி அதிபர் காரியாலயத்தில் நடைபெறும்.

...ஈடுபட்டுள்ளது.

0 0 0

## அதிக அளவு பி. வெங்காயம்

புத்தாண்டை முன்னிட்டு உணவு இலாகா 7500 தொன் பம்பாய் வெங்காயம் இறக்குமதி செய்துள்ளது. இத்தொகை ஒரு மாதத்துக்கு தேவையான அளவைக் காட்டிலும் 2500 தொன் மேலதிகமாகும். புத்தாண்டுக்குப் போதியளவு உபஉணவுப் பொருட்கள் கிடைக்குமஎன்றும் உணவு இலாகா அறிவித்துள்ளது?

0 0 0

## ரூபா 15,000 நன்கொடை

உணவத்துறை விலுள்ள பொனவிஸ்ர மகாவித்தியாலயத்துககு விஞ்ஞானகூடம் அமைப்பதற்குரிய அத்திவாரக்கல்லை திரு ஐ எம் ஆர் ஏ இரியகொல்லை நாட்டினர்- இவர் இககட்டிடத்துக்காக ரூ 15,000 நன்கொடை அளிப்பதாக வாக்களித்துள்ளார்.

0 0 0

## மேலதிக உப்பு விற்பனை செய்யமுயற்சி

1969-ம் ஆண்டில் மொத்தம் 110,000 தொன் உப்பு விளைச்சல் காணப்பட்டதாகவும் ஆனல் நாட்டின் மொத்த உப்புத் தேவை 85,000 தொன்னாக மட்டுமே இருப்பதனல் மேலதிகமாக உப்பு விளைந்துள் உப்பில் 1000 தொன்னை மாலைதீவுக்கு விற்கும் முயற்சியில் தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது,

—

## இடமாற்றம்

புத்தளம், செவ்வாய்

இலங்கை வங்கி புத்தளம் கிளையில் கடமையாற்றிய திரு. ஏ. பி. ரி. ஏ. வாஸ் ஏப்ரல் முதல்திகதியிலிருந்து நீர்கொழும்புக் கிளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


S. R. S. ஜவுளி மாளிகையில்
புதுவருட மலிவு விற்பனை
(1-4-70 — 14-4-70)
எஸ். ஆர். செல்லத்துரை
216, காங்கேசன்துறை வீதி (போன்: 296) யாழ்ப்பாணம்.

தினசரி சேமிப்புக்கு
வருடம் 6 சதவீத வட்டி
கொடுக்கப்படும்
இப்பணத்தை எப்பொழுதும் எடுக்கலாம்
மறுவிபரங்கட்கு:-
தம்பி அன் கோ
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “கம்போடிய விவகாரத்தில் தலையிடுக!”

## ஐ. நா.வுக்கு புதிய புரட்சி அரசு கோரிக்கை

நியுயோர்க், மார்ச் 31
கம்போடியாவுக்குள் வியட்காங்கியர் நுழைந்து தாக்குதல் நடத்துவதை உடனடியாக நிறுத்துவதற்கு தங்கள் செல்வாக்கை பிரயோகிக்கும்படி ஐ நா. தலைமைக் காரியதரிசி யுதாண்டை கம்போடிய அரசு கேட்டிருக்கிறது.

கம்போடியாவுக்குள் வியட்காங்கியர் நுழைந்து தாக்குதல் நடத்துவதையும் கம்போடிய அரசுக்கெதிரான நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்தும்படி ஐ. நா. பாதுகாப்புச்சபையையும் கம்போடிய அரசு கேட்டிருக்கிறது.

இதேசமயம் ஐ. நா வில் கம்போடிய அரசின் பிரதிநிதியாகப் பணியாற்றிவந்த திரு. கம்பஹாவை கம்போடிய அரசு அப்பதவியிலிருந்து நீக்கியிருக்கிறது, கவிழ்க்கப்பட்ட கம்போடியத் தலைவர் இளவரசர் நொரடம் சிகானுக்கை இவர் ஆதரித்து வந்ததாகவும் இதன்காரணமாகவே அவர் பதவிநீக்கம் செய்யப்பட்டாரென்றும் கூறப்படுகிறது.

கம்போடியாவுக்குள் வியட்காங்கியர் நுழைந்து நடத்தும் தாக்குதல் நிறுத்தப்படாமல் நீடித்தால், வெளிவல்லரசுகளின் உதவியுடனுவது அத்தாக்குதலை முறியடிக்கவேண்டிய அவசியம் கம்போடிய அரசுக்கு ஏற்பட்டுள்ளதென்று கம்போடிய அரசின் தலைவர் செங்ஹெங் எச்சரித்திருக்கிருர்.

## இலங்கை அகதிகளுக்கு தொழிற் பயிற்சி வகுப்புகள்

சென்னை, மார்ச் 31
இலங்கை, பர்மா ஆகிய தேசங்களிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களும், குறைந்த கல்வித்தகுதி உள்ளவர்களுமான, சிறுவர்களுக்கு பர்மா அகதிகளுக்கான கும்மிடிப்பூண்டி முகாமில் புதன் கிழமை புகுமுக தொழில் பயிற்சி நிறுவன வகுப்புகள் தொடங்கப்படவுள்ளன.

போதுமான கல்வித்தகுதி பெருத இலங்கை, பர்மா அகதிகளில் தொழில்பயிற்சி பெறவிரும்புவோரை தொழில் பயிற் நிறுவனத்தில் சேர்க்க தகுதி உள்ளவர்களாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஒன்பதாம் பத்தாம் வகுப்புகளுக்கு சமமான தகுதிபெற்றவர்கள் இந்தப் பயிற்சிவகுப்புகளில் சேர்க்கப்பட்டு தொழில் பயிற்சி நிறுவனத்தில் சேருவதற்கு தேவைப்படும் அளவில் ஆங்கிலம், கணிதம் விஞ்ஞானம் ஆகியவைகளில் வகுப்புகள் நடாத்தப்படும்.

செங்கற்பட்டு மாவட்டம் கும்மிடிப்பூண்டிமுகாமில் இவ்வகுப்புகள் நடாத்தப்படும். பயிற்சிபெறுவோருக்கு முகாமில் சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. பயிற்சிக்காக தூரஇடத்திலிருந்து தங்கள் குடும்பங்களைப் பிரிந்துவந்த மாணவர்களின் குடும்பவருமானத்தைப்பொறுத்து மாணவர்களுக்கு நிதிஉதவி அளிக்கப்படும். வருமானம் குறைந்த குடும்பத்திலிருந்து பயிற்சிக்காகவரும் மாணவர்கள் விடயத்தில் கூடிய அக்கறை காட்டப்படவுள்ளது.

## “சிறுபான்மை மதத்தவருக்கும் அரசுபாதுகாப்பளிக்கவேண்டும்”

புதுடில்லி, மார்ச் 31
ஹரிஜனங்கள் பழங்குடி மக்கள் ஆகியோருக்கு இப்போது இருந்துவரும் சட்டபூர்வமான பாதுகாப்பை முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் குறைந்த தொகையினரால் கைக் டம் ஏற்படுத்தியுள்ள மந்திரிகளையும் மந்திரிப் பதவி வகித்தபோது ஊழல்களில் ஈடுபட்ட மந்திரிகளையும், சட்டசபை அங்கத்தினராக இருக்க அருகதையற்றவர்களாக்குவதற்கான மசோதா ஒன்றை திரு. ஓ. பி. தியாகி

## பிரேமலதா திருமணம்

சென்னை, மார்ச். 31
“ஓடும் நதி” படத்தின் மூலம் தமிழ்ப்பட இரசிகர்

## விமானத்தை திசைதிருப்ப முயன்ற ஜாப். மாணவர்கள்

ரோக்கியோ மார்ச் 31
ரோக்யோவிலிருந்து 135 பிரயாணிகளுடன் தெற்கு ஜப்பானுக்குப் புறப்பட்ட ஒரு பிரயாணிகள் விமானத்தை திசைதிருப்பி வடகொரியாவுக்குள் கொண்டு செல்ல ஜப்பானிய மாணவர்கள் எடுத்த முயற்சி விமனியின் திரத்திஞல் வெற்றிபெற முடியவில்லை.

வடகொரியாவுக்குக் கொண்டுபோகாமல் விமானத்தை வேருெரு விமான நிலையத்தில் இறக்கினுர் விமானி. பொலிசாருககும் அறிவிக்கப்பட்டது. ஆயினும் குறிப்பிட்ட மாணவர்கள் விமானத்தைவடகொரியாவுக்குக் கொண்டு செல்லாவிட்டால் அதைவெடிவைத்துத் தகர்கப்போவதாக விமானியை மிரட்டினர். விமானியையும் பிரயாணிகளையும் விமானத்திலிருந்து இறங்குவதற்கு அந்த மாணவர்கள் விடவில்லை.

எதிர்க் கட்சியினர்

## ‘மக்களை ஏமாற்றமுடியாது’

— தகா

நுவரெலியா செவ்
எதிர்கட்சியினரும் சில பத்திரிகைகளும் சேர்ந்து அரசாங்கத்துக்கு எதிராகப் பெரிய ஓயக்கங்களை ஆரம்பித்துள்ளனர். ஆனல் இனிமேல் மக்கள் ஏமாறமாட்டார்கள். அவர்களைத்தவருனவழியில் இட்டுச்செல்ல இயலாது.

நுவரெலியாத் தொகுதியில் நெசவு நிலைய மொன்றைத் ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் டாக்டர் தஹநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்துபேசுகையில் முன்னைய அரசாங்கம் பத்திரிகையை தேசியமயமாக்க நினைத்தது. அதைப்பத்திரிகைகள் எதிர்த்தன. இன்று அதேபத்திரிகைகள் எதிர்க்கட்சியினரை ஆதரிக்கின்றன. எனவே எமதபேட்சகர்கள் அவர்களது கண்டனங்கள்குறித்து பீதியடையக் கூடாது. தற்போது முன்னர்போல் நாட்டில் துணிப்பஞ்சம் ஏற்படாது சுதந்திரக்கட்சி அரசாங்கம் பதவியில் இருந்த காலத்தில் மக்கள் துணி பெறுவதற்கு கடைளின்முன் நீண்ட நேரம் வரிசையில் நிற்கவேண்டியிருந்தது எனக் குறிப்பிட்டார்.

திரு. டொனல்ட் ஜெ. ரணவீர, திரு. பி. எம். விஜெயகோன், திருமதி சோமி விமலதாஸா திருமதி கே. எச். பத்திராஞ ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

## ‘உரிமைகளைத் தருபவர்க்கு ஆதரவு தருவோம்’

— அமிர்

மூதூர், செவ்
எதிர்வரும் பொதுத்தேர்தலுக்குப் பின்னர் எந்தக் கட்சி எமக்கு உரிமைகளை அளிக்க முன்வருகிறதோ அதற்கு நாம் ஆதரவு அளிப்போம் 1965-ம் ஆண்டு தேசிய அரசாங்கத்தில் சேர்ந்ததால்ஒருசில உரிமைகளை நாம் பெற்ருேம். 1960-ம் ஆண்டு விட்ட பிழையை [illegible] விடவில்லை.

திருமலையில் நடைபெற்ற தால்தான் தமிழ்மொழியின் விசேட விதிகள் தமிழருக்குக் கிடைத்தது எனலாம். இதன் பின்னர் தனிச்சிங்கள விதியின் செல்வாக்கு தமிழ்ப் பகுதிகளில் குறைந்துவிட்டது எனக் [illegible]ஞர்.

திரு எஸ் ஜேவி செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு வி. தர்மலிங்கம், திரு கெ இராசதுரை, [illegible]நமிநாதன் உட்படப் பலர் உரையாற்றினர்.

## “சுதந்திரத்தின் பின்னரே தமிழினம் பிளவுபட்டது”

— ஜி. ஜி.

உடுப்பிட்டி, செவ்வாய்
“இலங்கை 1948-ம் ஆண்டு சுதந்திரம் அடைந்த பின்னரே தமிழினம் பிளவுபடத் தொடங்கியது. செல்வநாயகம் தமிழ்க்காங்கிரஸிலிருந்து பிரிந்து புதிய கட்சி ஆரம்பித்த நிலேலயே இந்நிலை ஏற்பட்டது. தமிழ் மக்கள் 1956-ம் ஆண்டு வரைதான் ஏகோபித்த முறையில்உரிமைகளைப்பெற முடிந்தது, இன்று தமிழினத்தின் பெருமைமிக்க சரித்திரத்தில் எம்மிடையே ஒற்றுமை இல்லாததால் களங்கம் ஏற்பட்டுள்ளது”

இவ்வாறு தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் முன்னுள் யாழ்ப்பாணம் எம். பி. யுமான திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் கலைக்கப்பட்ட ஆட்சிமன்றத்தின் உபசபாநாயகரும், உடுப்பிட்டி முன்னுள் எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரத்திற்குக் கரவெட்டியில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கரவெட்டி சாமியன் அரசடி வைரவர் கோவில் முன்றலில் நடைபெற்ற இக்கூட்டம் அட்வகேட் திரு. ஆர். சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

1956-ல் தனிச் சிங்களச் சட்ட மசோதா கொண்டு வரப்பட்டபோது அதனை வன்மையாக எதிர்த்த நான் இலங்கையில் தமிழினம் சுதந்திரமாக வாழ்வதற்காகவும் தமிழ்-சிங்கள மக்களின் ஐக்கியத்துக்கும் சிங்கள மொழிபோல் தமிழுக்குச் சமஅந்தஸ்துப்பெறுவதற்காகவும் ஆட்சிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் போராடிவருகின்றேன்.

எமது உரிமைகளைத் தரவிரும்பும் பெரும்பான்மை இனமாகிய சிங்களவரை எதிர்ப்பதால்தான் எமக்கு உரிமைகளைத் தரமறுக்கின்றனர். அன்பினுல்தான் எதையும் சாதிக்கமுடியும். சிங்களமக்களை அனுவசியமாக எதிர்த்ததால்தான் தனிச்சிங்களச்சட்டம் அமுலானது. நாம் பிரிந்திருப்பதால்தான் பயனில்லை.

இலங்கையிலுள்ள இந்தியத் தமிழர்விடயத்தில்இலங்கை அரசாங்கம் முடிவு எடுப்பதால் பயன்இல்லை. இந்தியப் பிரதமருடன்பேசியே ஒரு முடிவுக்கு வரவேண்டும் என

உடுப்பிட்டி எம். பி, திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில், “வடபகுதியில் விவசாய, பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது தண்ணீர்ப்பஞ்சம் தான். மகாவலிகங்கையை வடக்கே திருப்புவதிஞல் பஞ்சம் தீர்ந்து வடபகுதி செழிப்படையும் என நிபுணர்கள் கருதுகின்றனர். தமிழர்கள் பயன்பெறப் போகிருர்கள் என்ற பொருமையினுல் எதிர்க்கட்சியினர் இத்திட்டத்தை எதிர்க்கின்றனர்.

உடுப்பிட்டித் தொகுதி இலங்கையிலுள்ள தேர்தல் தொகுதிகளில் சிறந்த தொகுதிகளில் ஒன்ருக விளக்குகின்றது இதனையிட்டு நான் பெருமைப்படுகின்றேன். எனதுதொகுதியின் சகல தேவைகளையும் பாரபட்சமின்றியே செய்துவந்துள்ளேன்.

திருவாளர்கள்மோதிலால் நேரு, ஆனந்தசங்கரி, ஸ்ரீதரன், சிவநேசன், என். நடராசா உட்பட வேறு பலரும் பேசினர்.

கரவெட்டி கிராய்ப்பிள்ளையார் கோவிலடியிலிருந்து திரு. சிவசிதம்பரம் அலங்கரிக்கப்பட்ட டிராக்டர் வண்டியில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

## 22,000 பேர் தோற்றுவர்

கொழும்பு, புதன்
இவ்வருடம் ஜீ. சீ. ஈ, உயர்தர கலைப்பகுதிப் பரீட்சைக்கு 22,000 பரீட்சார்த்திகள் தோற்றவிருக்கின்றனர். 140 பரீட்சை ஸ்தானங்களில் இப்பரீட்சைநடைபெறும். தமிழ், சிங்கள புதுவருடத்தையொட்டி ஏப்ரல் 13, 14, 15-ந் திகதிகளில் பரீட்சை நடைபெறமாட்டாது.

நேற்று முன்தினம், இப்பரீட்சைக்குத் தோற்றஇருக்கும் பள்ளிக்கூட, பிரத்தியேக மாணவர்களுக்கு பரீட்சை இலாகா பிரவேசப் பத்திரம், நேரசூசி ஆகியனவற்றை அனுப்பியுள்ளது.

## இட மாற்றத்திற்கு ஆட்சேபம்

உடுப்பிட்டி, செவ்
புலோலி மேற்கு ஆண்கள் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு வ இராசையா அடுத்த மாதம் முதல் நாவலர்மடம் இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவ்விடமாற்றத்தை எதிர்த்து மேற்படி பாடசாலைப் பெற்ருர் ஆசிரியர் சங்கம் முன்னுள் எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

## மாணவர் சுற்றுலா

உடுவில், செவ்வாய்
மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலய மாணவ மாணவிகள்சென்ற வாரம் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டனர். திருக்கேதீஸ்வரம், மன்னுர், முருங்கன், மடுமாதா கோயில், வவனியா போன்ற பல இடங்களுக்கும் இவர்கள் சென்று பல சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களையும் ஸ்தலங்களையும் பார்வையிட்டனர். நூற்றுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுடில்லி, மார்ச் 31

ஹரிஜனங்கள் பழங்குடி மக்கள் ஆகியோருக்கு இப்போது இருந்துவரும் சட்டபூர்வமான பாதுகாப்பை முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் குறைந்த தொகையினரால் கைக்கொள்ளப்படும்இதரமதத்தினருக்கும் விஸ்தரிக்கக் கோரும்தனிநபர் மசோதா ஒன்றை ச. சோ. உறுப்பினர் மதுலிமாயி மேல்சபையில் தாக்கல்செய்துள்ளார். பின் தங்கியவருப்பினருக்குகிடைத்துவரும் விசேட பாதுகாப்புகளை இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த பணக்காரர்களும் செல்வாக்கு வாய்ந்தவர்களும் பயன்படுத்திக்கொள்வதைத் தடுப்பதற்காக 'பின்தங்கிய' என்ற வார்த்தையின் இலக்கணத்தை மாற்றி அமைக்கும் வகையில் சமூக, பொருளாதார அம்சங்களில் பின்தங்கிய நிலையிலுள்ளவர்களைக் குறிக்கும் விதத்தில் அதைஅழைக்கவிருக்கின்றது இம்மசோதா.

அரசினருக்குப் பணநஷ்டம் ஏற்படுத்தியுள்ள மந்திரிகளையும் மந்திரிப் பதவி வகித்தபோது ஊழல்களில் ஈடுபட்ட மந்திரிகளையும், சட்டசபை அங்கத்தினராக இருக்க அருகதையற்றவர்களாக்குவதற்கான மசோதா ஒன்றை திரு. ஓ. பி. தியாகி என்ற ஜனசங் அகங்த்தினர் தாக்கல் செய்துள்ளார்.

## சிவாஜிசேனை உறுப்பினர் கைது

பம்பாய், மார்ச் 31

பம்பாயில் ஒரு துணிக்கடையில் கொள்ளை அடித்ததாக பம்பாய் மாநகராட்சி சிவாஜிசேனை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து 800 ரூபா மதிப்புள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

## குதிரைப் பந்தயத்தில் குழப்பம்

### 4 பொலிசார் காயம்

சென்னை, மார்ச் 31

சென்னையில் 5 மாதகாலமாகத் தொடர்ந்து நடைபெற்றுவந்த குதிரைப்பந்தயத்தின் கடைசி நாளான நேற்று முன்தினம் ஏற்பட்ட கலட்டா காரணமாக 2 பந்தயங்கள் ரத்துச்செய்யப்பட்டன.

6-வது பந்தயத்தில் இரு குதிரைகள் ஒன்ருக வந்ததாகவும், அதில் 'கோல்ட் லீவ்' குதிரை வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்டதால் பார்வையாளர்கள் இதை ஏற்காமல் குழப்பம் விளைவித்ததாகவும் அப்போது நாற்காலிகள் நொருக்கப்பட்டதாகவும் பொலிசார் அமைதியை ஏற்படுத்த முயன்றபோது மரச்சட்டங்களையும் கற்களையும் செருப்புகளையும் கூட்டத்தினர் பொலிசார் மீது வீசியதாகவும் தெரியவருகிறது. இதில் 4 பொலிசார் காயமடைந்தனர்

## பேய்விரட்ட அடித்தபெண் மரணம்

நாகபுரி, மார்ச் 31

பேயைவிரட்ட சாது ஒருவர் எடுத்த முயற்சி பெண்ணொருவரின் உயிரைப்பலி வாங்கியது. இச்சம்பவம் அகோலா அருகே வர்தாவில் நடைபெற்றது.

பேயை விரட்டுவதற்காக கிராமத்தினர்கள் பெண்ணை அழைத்துக்கொண்டு சாது ஒருவரிடம் சென்ருர்கள். ஐந்துபேர்கள் அவளைப்பிடித்துக்கொள்ள சாது அப்பெண்ணை அடிக்க ஆரம்பித்தார். பெண் வலி தாங்காது கூக்கிரலிட்டாள்.

'பெண்ணிடமிருந்து பேய் ஒடுகிறது' என்று கூறிய சாது மேற்கொண்டுமடித்தபோது பெண்மயக்கமுற்ருள் அவளுடைய உயிர்பிரிந்தது பொலிசார் சாதுவையும், 5 நபர்களையும் கைதுசெய்துள்ளனர். விசாரணை நடைபெறுகிறது.

மேமாதம்

## 3000 பேருக்கு வேலைவாய்ப்பு

நடுகலை, செவ்வாய்

3000 பட்டதாரிகளுக்கு மே மாதத்தில் ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குருத்வத்தை என்னும் இடத்தில் நடைபெற்ற ஐ. தே. கட்சியின் பிரசாரக்கூட்டத்தில்உரையாற்றிய நிதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசுகையில் நிதியமைச்சர் கூறியதாவது: 1968ம் ஆண்டுக்கு பின்னரே இந்தநாட்டில் உண்மையானபொருளாதாரவிருத்தியேற்பட்டது. எதிர்க்கட்சிலனர் மகாவலித்திட்டத்தை எதிர்க்கிருர்கள். ஆனல் அத்திட்டத்தின்மூலம் பயனடையும் மக்கள் அத்திட்டம் பூர்த்தியாவதை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருர்கள். இதுபோன்ற பெரிய திட்டங்களைப் பிறநாட்டாரிடமிருந்து கடன் பெருமல் செயலாக்கமுடியாது.

திரு. பேர்ஸி விக்ரமசிங்கா திரு லக்ஷமன் டி. சில்வா ஆகியோரும் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

## பிரேமலதா திருமணம்

சென்னை, மார்ச். 31

''ஓடும் நதி'' படத்தின் மூலம் தமிழ்ப்பட இரசிகர்களுக்கு அறிமுகமான, சினிமா நடிகை பிரேமலதா சென்னையைச் சேர்ந்த சூரிமுத்து என்பவரை காதல் திருமணம் செய்துள்ளார். மேற்கு மாம்பல திருமண பதிவு கந்தோரில் பிரேமலதா பதிவுத் திருமணத்தை செய்துகொண்டார்.

## விபரத்தைத் தருக...

யாழ்ப்பாணம், புதன்

அடிக்கடி பாடசாலைப் பிள்ளைகளும், பாதசாரிகளும் வாகனங்களால் விபத்துக்குள்ளாவதையறிந்து சாவகச்சேரி நகரசபையார் வாகனச் சொந்தக்காரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் ஒரே வழிப்பாதை என்ற ஒரு முக்கிய அறிவித்தலை வெளியிட்டுள்ளார்கள்

'வாகனங்கள் எவ்விதம் கொண்டுபோகவேண்டும்; பொதுமக்கள் எப்படிப் பாதையால் போகவேண்டும் என்பன விளக்கப்பட்டுள்ளன

ஒரே வழிப் பாதையைப் பாவிக்கும் முறை எதிராக வாகனங்கள் போகாது தடுத்தல் போன்ற விடயங்களும் விளக்கப்பட்டுள்ளன.

சந்தையைச் சுற்றியிருக்கும் வீதியோரங்களில் சைக்கிள்களை நிறுத்தாமல் இதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களிலேயே நிறுத்துமாறும், தனிப்பட்ட கார்கள் வாடகைக்கார்கள் மாட்டுவண்டிகள் இவை எது எங்கு எப்படியெப்படி நிறுத்தப்படவேண்டுமெனவும் பிரஸ்தாப பிரசுரம்தெரிவிக்கிறது. (கு. வி. ம)

## 'இன்னல்போக்க இறைநம்பிக்கை'

புலோலி, செவ்.

'வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களைப் போக்குவதற்குத் தெய்வ நம்பிக்கை முக்கியமானது. தெய்வ நம்பிக்கையைப் பெறுவதற்கு பஜனைகள் மிகவும் முக்கியம்' என துன்னலை கோயிற்கடவை பிள்ளையார் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த பஜனைகளை டாக்டர் திரு. கே. கணேசன் தம்பதிகள் நடாத்துகையில் அவர்களைப் பாராட்டிப் பேசுகையில் வரணி மகாவித்தியாலய அதிபர் திரு. வி. தங்கராசா குறிப்பிட்டார்.

தேசிய அரசாங்கத்தில் சேர்ந்ததால்ஒருசில உரிமைகளை நாம் பெற்ருேம். 1960-ம் ஆண்டு விட்ட பிழையை திரும்பவும்டட்லி விடவில்லை.

திருமலையில் நடைபெற்ற சமஷ்டிக் கட்சிகளின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்து பேசுகையில் தமிழரசுக்கட்சி அரசாங்கத்தோடு சேர்ந்து இயங்கிய

## காரிலிருந்து ரூ. 40,000 களவு

சென்னை, மார்ச் 31

பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள தாசப்பிரகாஷ் ஹோட்டலின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரொன்றிலிருந்து 40,000 பெறுமதியான கரன்சி நோட்டுக்கள் காணமல் போய்விட்டதாகப் பொலிசாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

வங்கிகளையும் புகையிரதப்பகுதியினரையும் மற்றும் பெரிய வியாபார நிலையங்களையும் இத்திருட்டைக் கண்டுபிடிக்க உதவுமாறு பொலிசார் வேண்டியுள்ளனர்.

......

## துருக்கியில் பூமியதிர்ச்சி

### 1000 பேருக்கு மேல் பலியாகினர்

இஸ்தான்புல், மார்ச்31

துருக்கி நாட்டில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பயங்கர பூமியதிர்ச்சியில் 1000 பேருக்குமேல் மண்ணில் புதையுண்டுமாண்டிருக்கலாமென நம்பப்படுகிறது.

## 'அரபுக்களை வலிமையாக்கும்'

ரெல் அவிவ், மார்ச் 31

இஸ்ரேலுக்கு மேலதிக போர் விமானங்களைக் கொடுத்து உதவவும் போர்ச்சாதனங்களைக் கொடுத்துதவவும் அமெரிக்கா மறுக்குமானல் அது மேற்காசியாவில் ஆயுத வலிமையில் வேபாட்டை ஏற்படுத்துமென்றும் இஸ்ரேலின் வலிமையைக் குறைப்பதன் மூலம் அரபுநாடுகளுக்குக் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் கருவிகளையும் ஆயுதங்களையும் சோவியத் யூனியன் பெருமளவில் கொடுத்து அவற்றின் வலிமையை அதிகரிக்க உதவுமென்றும் இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் திரு. எபா இபரன் தெரிவித்துள்ளார்.

திரு எஸ் ஜே வி செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு வி தர்மலிங்கம், திரு செ இராசதுரை, தி[illegible]நமிநாதன் உட்படப் பலர் உரையாற்றினர்.

## தலைமை ஆசிரியர் ஓய்வுபெற்ருர்

புத்தளம், செவ்வாய்

நாவற்காடு அரசினர் ருேமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலயத்தில் கடந்த பதினெட்டு வருடமாய்த் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. வர்ணகுலசூரிய மைக்கேல் லோவ் 60வது வயதில் தமது 38 வருட ஆசிரிய சேவையின்பின் பதவியினின்றும் ஓய்வுபெற்ருர். இவர் 1932-ம் ஆண்டு மட்டக்களப்பில் தமது ஆசிரிய பயிற்சியைப் பெற்ருர். கடந்த 22-ம் திகதியுடன் ஓய்வு பெற்ற இவ்வாசிரியருக்குப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும்சேர்ந்து அவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். நாவற்காடு பழைய மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்ருேர்களும் ஓய்வு பெற்ற ஆசிரியருக்குப் பிரியாவிடை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்துவருகின்றனர். இவரது இடத்திற்கு திருமதி ஏ. ஜி. இரத்தின சபாபதி பதில் தலைமையாசிரியராகப் பதவி ஏற்றுள்ளார்.

## 60,000 பேர் கடமையாற்றுவர்

கோட்டை, செவ்வாய்

60000 அரசாங்க ஊழியர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது கடமையாற்ற உள்ளனர். 7500க்கு மேற்பட்ட அரசாங்கத்துக்குரிய மோட்டார் வாகனங்களும் தேர்தலின்போது உபயோகிக்கப்படவிருக்கின்றன. 5,600 வாக்குச் சாவடிகளிலும் மேற்படி உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவர்.

......

## கம்பிக்களவை ஒழிகக நடவடிக்கை

கோட்டை, செவ்வாய்

சமீபத்தில் பொலிஸ் தந்திப் போக்குவரத்து இலாகா உயர்அதிகாரிகளுக்கிடையே நடைபெற்ற ஒரு மகாநாட்டில் சமீபகாலத்தில் அதிகரித்துவரும் தந்திக்கம்பி களவை ஒழிப்பதற்கு கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்த்து மேற்படி பாடசாலைப் பெற்ருர் ஆசிரியர் சங்கம் முன்னுள் எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

......

## பொலிசார் கவனிப்பர்

கோட்டை, செவ்வாய்

நாட்டில்தேர்தலின்போது ஒழுங்கையும் சட்டத்தையும் நிலைநாட்டும் பொறுப்பு பொலிஸ் படையினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. தேர்தல் தினத்தன்று அதற்கு முன்னர் நடைபெறும் தேர்தல் பிரசாரங்களின் போது அமைதியை நிலைநாட்டும் பொறுப்பு பொலிசாருக்கு அளிக்கப்பட்டுள்ளது. மக்கள் அச்சமின்றித் தமது வாக்குகளை அளிக்கவும் பொலிசார் தகுந்த ஒழுங்குகளைச் செய்து வருகிருர்கள்.

## புங்குடுதீவுக்கு மட்டும் ஒன்றரைலட்சம்

ஊரதீவு, செவ்

'புங்டிடுதீவுக் கிராமத்திற்கு நான் வாக்குக்கேட்டு வந்தபோது என்னை நோக்கி மக்கள் விடுத்த வேண்டுகோள் குடிதண்ணீர்தேவை என்பதுதான்.

நான்இந்தப் பிரச்னையை பற்றி ஆட்சி மன்றத்தில் எனது கன்னிப்பேச்சிலேயே குறிப்பிட்டுள்ளேன்.

எனது வேண்டுகோளை ஏற்று திரு. பிரேமதாஸா ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினதீவு ஆகிய இடங்களில் தண்ணீர்த் திட்டங்கள் அமைப்பதற்கும் இருக்கும் திட்டங்களைப் புனரமைப்புச் செய்செய்வதற்கும் உதவினர். புங்குடுதீவுக்கு மாத்திரம் ஒன்றரைலட்சம் ரூபாய் அரசினரால் வழங்கப்பட்டது. இதில் 75 ஆயிரம் ரூபா நன்கொடையாகவும் மிகுதி கடனுகவும் புங்குடுதீவு கிராமசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதை செயற்படுத்த வேண்டிய பொறுப்பு புங்குடுதீவுகிராமசபையைச் சேர்ந்ததாகும் இதைவிட இன்னும் பல முக்கியமான கடமைகளை நான் புங்குடுதீவுக் கிராமத்திற்குச்செய்துள்ளேன் இன்னும் செய்யவேண்டிய தேகைவள் பல உண்டு.''

தமிழர் சுயாட்சிக்கழகசுத் தலைவர் திரு. வ. நவரத்னம் புங்குடுதீவு கிழக்கு கிளை ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தால்தான் பயனில்லை.

இலங்கையிலுள்ள இந்தியத் தமிழர்விடயத்தில்இலங்கை அரசாங்கம் முடிவு எடுப்பதால் பயன்இல்லை. இந்தியப் பிரதமருடன்பேசியே ஒரு முடிவுக்கு வரவேண்டும் என நான் வற்றுபுறுத்தினேன். அரசியல் ஒரு விளையாட்டு அல்ல. நல்ல அனுபவமும், மேல்நாட்டில் பயிற்சிபெற்றவர்களும், சாஸ்திரீயஞானம் பெற்றவர்களுமே அரசியலில் இறங்கவேண்டும்.

## உபதபால் அதிபராக நியமனம்

துணுக்காய், செவ்வாய்

ஏப்ரல் 1ந் திகதியிலிருந்து துணுக்காய் உபதபால் நிலைய அதிபராக திரு க சந்திரசேகரம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்

## தபால் நிலையம் தரம் உயர்வு

சுன்னுகம், செவ்.


'பி' தரத்திலிருந்த ஏழாலை தெற்கு உப-தபால் கந்தோர் ஏப்ரல் முதல் திகதியிலிருந்து 'ஏ' தரத்திற்கு உயர்த்தப்பட்டது. தொலைபேசித் தொடர்பும் இங்கு விரைவில் கிடைக்குமென நம்பப்படுகிறது.

முருங்கன், மடு மாதா கோயில், வவுனியா போன்ற பல இடங்களுக்கும் இவர்கள் சென்று பல சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களையும் ஸ்தலங்களையும் பார்வையிட்டனர். நூற்றுக்கு அதிகமான மாணவ மாணவிகள் மேற்படி பாடசாலை ஆசிரியர்களுடன் பண்டிதர் திரு. எம். கதிரவேலுப்பிள்ளை தலைமையில் இப்பயணத்தை மேற்கொண்டனர்.

## பஸ்—வான் விபத்து

வேலணை, செவ்.

ஊர்காவற்றுறையிலிருந்து பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்தவானும் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற இ. போ. ச. பஸ் வண்டியும் எதிரெதிராக மோதிக்கொண்டதில் இரு வண்டிகளிலும் முன்பகுதி ாசதமுற்றன. இவ்விபத்து பண்ணைப்பாலத்தில் நிகழ்ந்தது. இருவரில் ஒருவருக்குச் சிறிது காயம் ஏற்பட்டது. அதிர்ச்சியடைந்த பெண் பிரயாணி ஒருவர் கார்மூலம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்



மகாசிவராத்திரியை முன்னிட்டு அராலி வடக்கு சில்வஸ்ராரர் விளையாட்டுக் கழகம் நடத்திய 'தியாகமா? துரோகமா?' நாடகத்தின் இயக்குநர் கலைமணி பொ. செல்வக்குமாரசுவாமிக்கு மேற்படி கழகத்தலைவர் ஆசிரியர் நா. இரத்தினசாமி பொன்னடைபோர்த்திக் கௌரவிப்பதை படத்தில் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

எவன் இளமையிலிருந்தே இறைபக்தி உடையவனாக இருக்கிறானோ அவனே பாக்கியசாலி.

— அன்னை சாரதாமணி,


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 19-ந் திகதி (1-4-70)


## தேர்தல் பிரசாரம்

பொதுத் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிறது தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும் கட்சி அபேட்சகர்களும், சுயேச்சையாளர்களும் தங்களுக்கு ஆதரவு தேடுவதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளனர். வீடு வீடாகச் சென்றும் விழாக்கள் மற்றும் வைபவங்களில் கலந்துகொண்டும் தேர்தல்பிரசாரக் கூட்டங்கள் நடத்தியும் தங்களுக்கே வாக்களித்து, தங்களையே தெரிவுசெய்து அனுப்புமாறு இவர்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். இதில் தவறில்லை. ''என்னை அனுப்புங்கள், எங்கள் கட்சியை அனுப்புங்கள் உங்களுக்கு நன்மைசெய்வோம்; சேவை செய்வோம்'' என்று கேட்பதில் தவறில்லை; பிரச்னையும் வராது எங்கள் கொள்கை இதுதான், எங்களைத் தெரிவுசெய்து அனுப்பினால் இந்தக் கொள்கைகளை நிறைவேற்றுவோம்'' என்று சொல்வதுதான் நியாயமும், சரியானதும் கூட. ஆனால் ''என்னை அனுப்பாவிட்டாலும் பரவாயில்லை. அவரை அனுப்பாதீர்கள் என்று சொல்வதிலும் ''அவர்களும் அவர்கள் கட்சியினரும்தான் நாட்டின் துரோகிகள்'' என்று கூறுவதிலும் தமது கொள்கை, இலட்சியம் நோக்கங்களை மக்களுக்கு, வாக்காளர்களுக்கு தெரிவிப்பதை விடுத்து மற்றவர்களைக் கண்டுபிடிப்பதுதான் சரியான முறையென்று நினைத்துப் பிரசாரம்செய்வதிலும்தான் அமைதி குலைந்து, வன்முறைகள் தலைதூக்கக் காரணமாகின்றன. கட்சிகளும் அபேட்சகர்களும் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளாமலும் தனிப்பட்ட வாழ்க்கையை எடுத்துப்பேசாமலும் தங்கள் திட்டங்களையும் கொள்கைகளையும் எடுத்துக்கூறி வாக்காளர் சிந்தித்து தங்கள் வாக்குகளை உபயோகிப்பதற்கு அவர்கள் விருப்பத்துக்கு விட்டுவிட்டால் தேர்தல் அமைதியாக நடைபெறும்

தம் உண்டா? தேர்தல் அமைதியாகவும் நேர்மையாகவும் நடைபெறவேண்டுமென்று சொல்லிக்கொள்வதில்தான் அர்த்தம் இருக்கிறதா?

தேர்தல்பிரசார முறையில் சில அரசியல்வாதிகள் கடைப்பிடிக்கும் வழிமுறைகளைக் கவனிக்கையில் நமது நாட்டில் வகுப்புக்கலவர அபாயம் தோன்றக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாக இரகசியப் பொலிஸ்அறிக்கையொன்று கூறுகிறதாம்- தேர்தல் நெருங்கிவருவதால் நாட்டில் பிளவை ஏற்படுத்த சில சக்திகள் முனைந்துவருவதாக சில தினங்களுக்கு முன் பிரதமரும் அபிப்பிராயம் தெரிவித்திருந்தார். இந்த நிலைக்கு இரு தரப்பிலுமுள்ள தீவிரவாதிகள்மீதும் அவர் குற்றம்சாட்டியிருந்தார்.

இது பிரதமர் அறிந்திராத உணர்ந்திராத, எதிர்பார்த்திராத விஷயமல்ல ''சூடு கண்ட பூனை அடுப்படியை நாதாது'' என்பது தமிழில் உள்ள ஒரு பழமொழி. இந்தப் பழமொழியை இலங்கை அறியாவிட்டாலும் மலேசியா அறிந்துகொண்டதென்பது அங்கு சென்ற பொதுத் தேர்தலையடுத்து பின் நடந்த வகுப்புக்கலவரத்தின் பின் வகுப்புத் துவேஷத்தைத் தூண்டிவிடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்காக தேர்தல்சட்டத்தில் அந்த அரசுத் திருத்தம் கொண்டுவந்துள்ளது. 1958-ம் ஆண்டு அனுபவத்தின் பின் நமது நாடு ஏன் இதற்கு முயற்சி செய்யவில்லை.

தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு வகுப்புவாதத்தைத்தான் நமது நாட்டிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் மூலதனமாகக் கொண்டிருக்கின்றனரா? போனது போகட்டும் இனியாவது இதே தவறைச் செய்யாமல் முன்னெச்சரிக்கையான சில முயற்சிகளை மேற்கொள்ள அரசியல் தலைவர்கள் முன்வரவேண்டும்.

இதற்கிடையில் பொலிசார்

# மாநில சுயாட்சி இன்றியமையாதது

— தவத்திரு குன்றக்குடி அடிகளார்

[தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர்மு. கருணாநிதியின் மாநில சுயாட்சி இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து 'தமிழகம்' இம்மாத சஞ்சிகையில் அடிகளார் எழுதிய தலையங்கம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது]

நாடு விடுதலை பெற்று கால் நூற்றாண்டே நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்தக் கால எல்லையில் மாநில மத்திய அதிகார வரம்புகளைப் பற்றிய விவாதம் தொடங்கியிருக்கிறது. தமிழக அரசு முதல்வர் கலைஞர் மாநிலங்களின் சுயாட்சியைத் தன்னுடைய கட்சியின் இலட்சியமாக வைத்துள்ளார். மாநிலங்களின் சுயாட்சி மட்டுமல்ல. மத்தியில் மாநிலங்களின் கூட்டாட்சியை ஒரு சிலரைத் தவிரப் பலர் ஒத்துக்கொள்வார்கள். ஆனாலும், மத்தியில் மாநிலங்களின் கூட்டாட்சி என்பதுபலருக்கு வினாக்குறியாகவே விளங்கும், எதிர்ப்புங்கூட அதிகமிருக்கும். ஆனாலும், பல எதிர்ப்புக்களைக் கடந்து வளர்ந்த கலைஞரும் அவர் தம் கட்சியும் இந்த எதிர்ப்புக்களை ஏற்று, இலட்சியப்பாதையில் நடை போடுவார்கள் என்றே நம்புகின்றோம்.

பொதுவாக, மக்களாட்சி நிலவும் நாட்டில் அதிகாரம் எல்லாம் மக்களுக்கேயென்பது சித்தாந்தம் அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிவதன் காரணமாகத்தான் உயர்வு தாழ்வு மனப்பான்மை தோன்றுகிறது. அதிகார வெறி தலைகாட்டுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக சிபாரிசுகள், சலுகைகள், லஞ்சம் ஊழல் ஆகியவைகளும் தோன்றுகின்றன, ஆதலால், அதிகாரத்தைப் பரவலாக்குதல் என்பது மிகமிக இன்றியமையாத ஒன்று பரப்பளவில் பெரிய கோடிக்கணக்கில் மக்கள் வாழுகின்ற இந்த நாட்டில்-அதுவும் பல்வேறு மொழியினரும் சமயத்தினரும் வாழ்கிற இந்தநாட்டில் அதிகாரக் குவியல் முறை நிச்சயமாகக் கேடு பயக்கும். ஆதலால், மாநில சுயாட்சி இன்றியமையாத ஒன்று.

அதேபோழ்து இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டுக்கு எல்லைப் புறங்களில் பகை சூழ்ந்திருக்கும் இந்தக் காலத்தில் ஒரு வலிமை பொருந்தியநடுவன் பேரரசு இருக்கவேண்டும் என்பதற்கு, இரண்டாவது கருத்திருக்க நியாயமில்லை இன்று இந்தியா முழுதும்மாநிலஎல்லைச் சண்டைகள்- மாநிலங்களில் நடைபெறும் அரசியல் கட்சிச் சண்டைகள்- நதி நீர்ப் பங்கீட்டுச் சண்டைகள் ஆங்காங்கு தோன்றிக்கொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் ஓர்ந்து கண்ணோடாது. உடனுக்குடன் முறைமை வழங்குகின்ற நடுவண் பேரரசு தேவை, நடுவண் பேரரசு, வலிமையாக இருக்கவேண்டுமே தவிர, அளவில் பெரியதாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இப்போதைய நிலையில் நடுவண் பேரரசுபெரியதாக இருக்கிறதே தவிர வலிமையுடையதாக இல்லை நடுவண் பேரரசின் ஆட்சிமுறை அமைப்பில் நிறைய செலவிடப் படுகிறது: ஒரே காரியத்தை மாநில அரசும் சிந்திக்கிறது. திட்டம் தீட்டுகிறது. நடுவணரசும் சிந்திக்கிறது, திட்டம்தீட்டுகிறது. உதாரணத்திற்குக் கல்வியை எடுத்துக் கொள்ளலாம். மக்களின் அன்றாட வாழ்க்கைத் தொடர்புடைய செய்திகள் அனைத்தையும் மாநிலஆட்சியிடம் ஒப்படைப்பதே நல்லது.

ஆக, மாநில சுயாட்சியின் தேவையும் நடுவண் பேரரசின் வலிமையும் ஒரு பொழுதில் மிளிரத்தக்க இருவெறு உண்மைகள். கலைஞர்காலத்தில் இந்தச் செய்தியை இந்தியநாட்டு மக்கள் முன்வைத்திருக்கிறார். ஆம், தமது கழகத் தோழர்களுக்குப் புதியதோர் இலட்சியத்தையெடுத்துக் கொடுத்திருக்கிறார். அரசியல் கட்சிகளுக்கு இலட்சியத் தன்மையுடைய கடமைகளைக் கொடுத்து வந்தால் அவைகள் வளரும், வாழும் கலைஞரின் மாநில சுயாட்சி இயக்கம் வெற்றி பெற நமது வாழ்த்துக்கள்.

0 0 . 0

லெனின் நூற்றாண்டு

## லெனினின் ஓர் ஏக்கர்நிலம்

— ஜி. அலக்ஸியேவ் —

'லெலினை மறவாதீர்கள, விளடிமீர் இலியச் லெனினை மறவாதீர்கள' என்று இவான் பெரிப்லியோடொல் உரத்த குரலில் முழக்கமிட்டார். நிலப் பிரபுக்களுக்குரிய நிலம் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டபோதே இவர் இவ்வாறு ஓங்காரக்குரலில் சங்கநாதமெழுப்பினார்.

அவர்கள லெனினை எவ்வாறு மறக்கமுடியும்? அதற்கு முந்திய நாளிரவு தான் ஒரு ஏக்கர் நிலம் அளிக்கப்படவேண்டியவர்களின் பட்டியலில் அவர்கள் லெனின் நாமத்தைச் சேர்த்துக் கொண்டார்கள.

'அது சரி'

'அனைத்திற்கும் அவரே பொறுப்பாளி'

'அவருக்கும் சொந்தமாக கொஞ்சநிலம் இருந்தேயாக வேண்டும்'

சரியான காணித் துண்டைத் தெரிவுசெய்வதில் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள. மிகச் சிறந்த துண்டு நிலம் கொடுக்கப்படவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். கிராமத்தின் எந்தப் பக்கத்தில் அது இருக்கவேண்டும் என்று அவர்கள விவாதித்தார்கள் சேறும் சதுப்புமில்லாததாகவும்,

விழைந்தார்கள. அதைத் தெரிவு செய்து அவர்கள அளந்தார்கள பின்னர் லெனினுக்கு அவர்கள எழுதினார்கள வந்து நிலத்தை பொறுப்பேற்குமாறு அதில் அவர்கள கேட்டுக் கொண்டார்கள

சில தினங்களுள் அவர்களுக்குப் பதில் வந்தது. அவர்கள் காட்டிய சிரத்தைக்காக லெனின் தன் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்திருந்தார். சோவியத்மக்கள் கமிஸர் கவுன்சிலில் தனது முழுநேரமும் செலவாவதால் விவசாயம் செய்வதற்கு அவகாசம் இல்லையென்று தெரிவித்த அவர், ஆகவே தனது மதிப்புக்குறித்து இதயம் நோகவேண்டாம் என்றும் விநயமாகக் கேட்டுக் கொண்டார். தாம் பொருத்தமானது எனக் கருதும் வகையில் அந்த ஏக்கரைப் பயன்படுத்துமாறு கூறி அவர் கடிதத்தை முடித்துக் கொண்டார்.

[illegible]ருத்தமான வகையில் அந்[illegible] ஏக்கர் காணியைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டதன்மூலம் லெனின் அவர்களுக்கு ஒரு பிரச்னையை ஏற்படுத்திவிட்டார் [illegible] என்ன செய்யவேண்டுமென்று அவர் மட்டும்

## ''ஈழம் - தமிழகம் பேதம் கலைஞர்களிடையே கூடாது''

— சேது சகோதரர்கள்

உடுப்பிட்டி, செவ்

இரு நாடுகள் எத்தகைய பகைமை வாய்ந்த நாடுகளாக விளங்கினாலும் கலையின் மூலம்தான் இரு நாடுகளுக்குமிடையிலும் ஒற்றுமைப்பாலம் அமைக்கலாம் ஆனால் இலங்கை அரசாங்கம் கலைஞர்களின் வருகைக்குத் தடை போடுவது வியப்பையும் வேதனையையும் அளிக்கின்றது.

இவ்வாறு கலைக்கப்பட்ட ஆட்சிமன்ற உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம் பியுமானதிரு எம் சிவசிதம்பரம் ல்திலாறு மோகனும்பாள் புகழ்நாதஸ்வரக்கலைஞர்கள் மதுரை சேதுராமன் சகோதரர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

கடந்தசனிக்கிழமை இரவு கரவெட்டி யார்கரு விநாயகர்ஆலயத்தில் சேதுராமன்

திரு. வி. தெட்சணமூர்த்தி கரவேசு சுரஞான சேகரி நாச்சிமார் கோயிலடி திரு. கே. கணேஷ், வித்துவவிவகாரமணி இணுவில் திரு என். ஆர், சின்னராசா, திரு புண்ணியமூர்த்தி ஆகியோர் தவில் வாசித்தனர்.

ஈழத்துக் கலைஞர்கள் பற்றிய அபிப்பிராயம் கேட்டபொழுது திரு. சேதுராமன் திரு. பொன்னுச்சாமி சகோதரர்கள் நிருபர்களிடம் கூறியதாவது.

ஈழத்துக் கலைஞர்கள் தமிழகக் கலைஞர்கள் என்ற பேதமே இருக்கக்கூடாது. கலைஞர்கள் ஒரே ஒரு வரிசையிலேயே வைக்கப்படவேண்டியவர்கள் கலைஞர்கள் அனைவரும் கூட்டுறவு முறையில் இயங்கவேண்டும் கலைஞர்களுக்கென ஒருஸ்தாபனம் அவசியம்.'

# நாட்டிலும் நகரிலும்

தேர்தல் காலம் சமீத்தவுடனே அரசியல் தலைவர்கள் எல்லோருக்கும் திடீரென்று தேசப்பற்று கரைபுரண்டு ஓடும் வாக்காளப் பெருமக்களை நினைந்து நினைந்து நெக்குருகுவார்கள். அரசபீடத்தை எங்கள் கையில் ஒப்படைப்பீர்களானல் ஆதவனையும் பிடித்துத் தருவோம் என்று ஆசை காட்டுவார்கள். அவர்களுடைய நெஞ்சம் நெகிழும், நா குளறும் வாய் ஓவென்று திறக்கும்.

வாக்காளப் பெருமக்களுக்கும் வாய் ஓவென்று திறக்கும், ஆச்சரியத்தால் முழி பிதுங்கும். மகுடி கேட்ட நாகம்போல மெய் மறந்து கேட்பார்கள்.

நாங்கள் வெற்றி பெற்றால் உங்களுக்கு இரண்டு கொத்தரிசி தருவோம். என்றார் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா. வாக்காளப் பெருமக்கள் ஆச்சரியமிகுதியால் மூச்சைப் பிடித்துக் கொண்டனர். 'அதெப்படி முடியும்! இரண்டு கொத்தையும் இலவசமாகக் கொடுப்பீர்களா?' என்று கேட்டார் திரு. டட்லி சேனநாயகா. வாக்காளப் பெருமக்கள் மூச்சை வெளியே விட்டனர். சிறிமாவோ கேட்ட கேள்விக்கு மறுமொழி சொல்லவில்லை அவருடைய பொருளாதார நிபுணர் டாக்டர் என். எம். பெரேரா தான் மறுமொழி சொன்னார். 'ஆம். தருவோம். ஒரு மாதத்துக்குள் தருவோம். ஒரு கொத்து இருபத்தைந்து சதப்படி தருவோம்' என்றார் பொருளாதார டாக்டர். வாக்காளப் பெருமக்கள் மறுபடியும் மூச்சைப்பிடித்தனர். பிடித்துக்கொண்டே இருக்கின்றனர்.

மகாவலித் திட்டம் மகா செல்வத்தை கொண்டு வரப்போகிறது என்கிறார் டட்லி. ஆஹா, நானல்லவா இந்த யோசனையை முதன் முதலில் பிரஸ்தாபித்தவன்' என்று மார்பில் தட்டிக் கொள்ளுகிறார் சாவகச்சேரி குமாரசுவாமி.

'பூப்பூ? உதென்ன உது வெறும் கடதாசித் திட்டம் தானே. உது எங்கே உடுப்படப்போகிறது. நாட்டைக் குட்டிச் சுவராக்கிவிடும். பார்க்கவில்லையா அந்த கல்லோயா திட்டத்தை? வெறும் ஜப்பான் பொம்மையாகி விட்டதே!' என்று ஏளனம் செய்கிறார் டாக்டர் பெரேரா.

வாக்காளப் பெருமக்க

லாபமோ நட்டமோ, தமிழ் மாகாணம் என்று கருதப்பட்டு வந்த கீழ்மாகாணத்தில் சிங்கள விவசாயிகளைக் குடியேற்றி, அம்பாறை தொகுதியிலிருந்து ஒரு சிங்களவர் எம். பி. யாவதற்கு கல்லோயா திட்டம் உதவி புரிந்துவிட்டது.

முன்னாள் பிரதம நீதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரிப்பவருமான திரு. ஹேமாபஸநாயகாவின் வாய் வழக்கமாக முத்து உதிர்ப்பதில்லை. வகுப்புவாத விஷத்தை கக்கிக் கொண்டிருக்கும். அவருடைய வாயிலிருந்து ஒரு முத்து தவறுதலாக உதிர்ந்துவிட்டது. மகாவலி கங்கை திட்டத்துக்கு இத்தனை கோடி ரூபாய் செலவழிப்பதைக்காட்டிலும் தூர்ந்துபோய் காடு பரவும் ஆயிரக் கணக்கான சிறு குளங்களை புதுப்பித்தால் நாட்டுக்கு நன்மையுண்டு என்று அவர் கூறுகிறார்.

என்னைப் பொறுத்தவரையில் இது ஒரு மிகவும் புத்திசாலித்தனமான யோசனை என்றே படுகிறது. 'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்...?

எந்த வாய் வெளியிட்டாலுமென்ன! நல்ல யோசனை என்று கண்டால் அதை ஒப்புக்கொள்ள வேண்டும் தானே!

— வழிப்போக்கன்

## இருவருக்கு காயம்

யாழ்ப்பாணம், செவ்

பருத்தித்துறையில் நடந்த தாக்குதல், சம்பவமொன்றில் இராசையா மகாதேவா சிவானந்தன் ஆகிய இருவரும் காயமடைந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுசம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யபபடவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

## கொலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பி. திரு. வி. என் நவரத்தினம் கூறினார்.

திரு. நவரத்திதும் மேலும் கூறியதாவது: தென்மராட்சிப்பகுதியிலுள்ள கோவில் முகாமையாளருக்கு சிறுபான்மைத் தமிழர்கள் எழுதியது போன்ற அனாமதேயக் கடிதங்கள் அனுப்பப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துப்பேசாமலும் தங்கள் திட்டங்களையும் கொள்கைகளையும் எடுத்துக்கூறி வாக்காளர் சிந்தித்து தங்கள் வாக்குகளை உபயோகிப்பதற்கு அவர்கள் விருப்பத்துக்கு விட்டுவிட்டால் தேர்தல் அமைதியாக நடைபெறும் வன்முறைச் செயல்களும் தலைதூக்கமாட்டா. பொதுத் தேர்தலை எதிர்பார்த்திருந்தது போலவே, தேர்தல் பிரசாரத்தில் இன, மத துவேஷப்பிரசாரமும் தலைதூக்குமென்பதையும் எதிர்பார்த்திருக்கவேண்டும். தேர் அமைதியாகவும் நேர்மையாகவும் நடைபெறவேண்டுமென்பதில் அரசியல் தலைவர்களுக்கும் அரசியல்கட்சிகளுக்கும் உண்மையாகவே அக்கறையிருந்திருக்குமானால், நாம் இதற்குமுன் பலதடவைகளிலும் இதேபத்தியில் எடுத்துக்காட்டியிருந்ததுபோல் தேர்தல் பிரசார நெறிமுறைக் கோட்பாடு ஒன்றை வகுத்து அதன்படி பிரசாரத்திலீடுபட்டிருக்கலாம் நாட்டின் அமைதியையும்ஒற்றுமையையுமே விரும்புவதாக யாரும் கூறிக்கொள்வதில் அர்த்

... போனது போகட்டும் இனியாவது இதே தவறைச் செய்யாமல் முன்னெச்சரிக்கையான சில முயற்சிகளை மேற்கொள்ள அரசியல் தலைவர்கள் முன்வரவேண்டும்.

இதற்கிடையில் பொலிசார் தமது கடமையை உணர்ந்து, இப்போதுள்ள குற்றத் தடுப்புச் சட்டவிதிகளின்கீழ் இன, மத,துவேஷத்தைத் தூண்டி நாட்டின் அமைதியைக் குலைக்க முயல்வோர் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

ஒன்றுமில்லாத இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் ஏதோ பேசிவிட்டதாக வெளிவந்த செய்தியைக்கொண்டு நாடு முழுவதும் இரகசியப்பொலிசார் பயணம்செய்து குறிப்புக்கள் எழுதியது பெரிய விஷயமல்ல பகிரங்கமாக இனத்துவேஷத்தைத் தூண்டிவிடக் கூடிய முறையில் பேசும் ''பெருப்புள்ளிகள்'' மீது நடவடிக்கை எடுப்பதுதான் கடமையும் துணிச்சலும்; சரியான செயலுமாகும், பொலிசார் இதைச் செய்வார்களா?

# சாதாரண வருஷ வாக்கிய பஞ்சாங்கம்

யாழ்ப்பாணம் கொக்குவில் இ சி இரகுநாதையர் சகோதரின் புத்திரர் இ. வேங்கடேச ஐயரால் கணிக்கப்மெற்று வெளியிடப்பட்டசாதாரண வருஷ வாக்கிய பஞ்சாங்கம்கிடைக்கப்பெற்ருேம்.

அச்சுப்பதிவு: சோதிடப் பிரகாச யந்திரசாலை விலை; ரூபா 2-00.

இப்பஞ்சாங்கம் 113வருடகாலமாக காகிதத்தில் அச்சிடப்பெற்று தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றது.

303 வருடங்களுக்கு முன் முதன்முதலாக இலங்கையில் வெளிவந்த வாக்கிய பஞ்சாங்கத்தின் சோதிட பரம்பரையில் 13-ம் தலைமுறையின் முதல்வராகிய பிரம்மஸ்ரீ இ சி இ வெங்கடேச ஐயர் அவர்களால் கணிக்கப்பெற்று இம்முறை வெளியிடப்பெற்றுள்ளது.

இம்முறை பஞ்சாங்க அம்சங்கள் பலவையும் கூடியகவனத்துடன் வெளியிட்டுள்ளார்கள். வழமையாக வெளிவரும் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவங்களின் விரிவான நிரல் போன்று வண்ணை ஸ்ரீவெங்கடவரதராஜப் பெருமாள், யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன், உசன் கந்தசாமி ஆகிய தலங்களின்உற்சவ விபரம் தனித்தனி வெளியிடப்பெற்றுள்ளன. வருஷபலன், கந்தாயபலன், சங்கிராந்திபலன், கிரகசாரமாதபலன்,மாதகோசரபலன், கிரகசாரம், வருஷப்பிறப்புக்கருமங்கள், சுபமுகூர்த்தங்கள், மற்றும்வழமையான எல்லா அம்சங்களும் இப்பஞ்சாங்கத்தில் இடம்பெற்றுள்ளன. உலகத்தின் எப்பாகத்திலுமுள்ள தமிழ் மக்களுக்கும் சைவ, வைஷ்ணவ அறிஞர்களுக்கும் இது பெரிதும் பயன்படும். — சபா

—

## நாடகம்

எழுவைதீவு, புதன்

வருகிற ஞாயிற்றுக்கிழமை எழுவைதீவு அர்ச். தொம்மையப்பர் கோவிலுக்கு அருகாமையில் உள்ள வடக்குத் திறந்தவெளியில் 'பொன்னூல் செபமாலை' என்னும் நாடகம் நடைபெறவிருக்கிறது.

துண்டு நிலம் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்பினுர்கள். கிராமத்தின் எந்தப் பக்கத்தில் அது இருக்கவேண்டும் என்று அவர்கள விவாதித்தார்கள் சேறும் சதுப்புமில்லாததாகவும், வரண்டு தட்டந்தரையாகவும் இல்லாத ஒரு ஏக்கர் நிலத்தைத் தேர்ந்தெடுக்க அவர்கள் விரும்பினுர்கள். வேறுவார்த்தையில் வளமிக்க நிலத்தை தெரிவு செய்யவே அவர்கள் அந்த ஏக்கர் காணியைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டதன்மூலம் லெனின் அவர்களுக்கு ஒரு பிரச்னையை ஏற்படுத்திவிட்டார் அது என்ன செய்யவேண்டுமென்று அவர் மட்டும் கூறியிருந்தால்......

இதுபற்றி அவர்கள் விவாதித்தார்கள், மீண்டும் மீண்டும் விவாதித்தார்கள்.

வேறு யாருக்கும் அந்த நிலத்தை அளிப்பதில்லை என்று அவர்கள் இறுதியில் முடிவு செய்தார்கள். அது அவர்களுக்கிடையில் பகிர்ந்துகொள்ளவும் படமாட்டாது. அது அவர்களின் பொதுச் சம்பத்தாக இருக்கும், அவர்கள் அதைக் கூட்டாகவே உழுவார்கள், கூட்டாகவே அறுவடை செய்வார்கள். அதில் விளையும் தானியங்கள் பொதுத் தானியக் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்படும், இது புத்திசாலித்தனமான முடிவு அவசியமாகும்போது 'கைகொடுக்க' பொதுச் சேமிப்பு இருக்கிறது.

பொஹமோவ் குடும்பத்தின் நிலத்தில் வேளாண்மை வீழ்ச்சியுற்ற வருடத்தில் அவர்கள கடன்பட்டேயிருக்கவேண்டும். ஆனல் லெனினின் ஏக்கர் நிலத்திலிருந்து கிடைத்த தானியம் அவர்களுக்கு உணவளித்தது.

விவசாயம் செய்ய விவசாயிகளுக்குத் தேவையானவை பல உண்டு, கதிரடிக்கும் யந்திரம் வாங்க அவர்கள முடிவுசெய்தனர். ஒவ்வொருவரிடமும் நிதிதிரட்டவேண்டிய தேவை இருக்கவில்லை, பொதுவிளைச்சலை விற்று அவர்கள் அந்த யந்திரத்தை வாங்கினுர்கள், இவர்கள் கூட்டம் நடத்தும்போதெல்லாம் யாராவது ஒருவர் நாங்கள் தொழிலாளர்களுக்கு அன்பளிப்பு ஒன்றை அனுப்பவேண்டாமா?'' என்று கேட்பார்.

ஆகவே அவர்கள்நகரப்புற தொழிலாளிகளுக்கு அளிப்பதற்கான பல மூட்டைத் தானியங்களை லொறியில் ஏற்றுவார்கள் இந்த அன்பளிப்புடன் சென்ற கடிதம் பின்வருமாறு கூறியது. 'உங்களுக்காக நாங்கள் அனுப்பும் இந்த தானியம் லெனினுக்குரிய ஏகசர் நிலத்தில் விளைந்ததாகும்'

பத்தாண்டுகள் உருண்டோடின, கிராமங்களில் முதலாவது கூட்டுப் பண்ணைகள் ஸ்தாபிக்கப்பட்டன நிலமும் கால்நடையும் பொதுச் சொத்துக்களாயின லெனினின் ஒரு ஏக்கர் நிலமும் கூட்டுப்பண்ணையில் ஐக்கியமுற்றது ஆனல் அந்த ஒரு ஏக்கர் நிலத்தை மக்கள் என்றுமே மறக்கவில்லை அது அவர்களின் மனத்திலிருந்து என்றுமே மறையாது

ஆசிரியர் சங்க

## பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கடந்த ஆண்டு நடத்திய சங்கப் பரீட்சைகளில் பங்குகொண்டு ஒத்துழைப்பு நல்கிய சகல வித்தியாலய அதிபர்களுக்கும் சங்கம் நன்றிதெரிவித்துள்ளது. மேற்படி பரீட்சைகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்ட 3-ம், 4-ம், 5-ம் வகுப்பு மாணவர்களின் பெயர் விபரங்களையும் சங்கம் வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு பரீட்சையில் சித்தியடைந்த 5-ம், 8-ம் வகுப்பு மாணவர்களின் சான்றிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், பரிசுகள் எதிர்வரும் சங்கவருடாந்த மகாநாட்டில் வழங்கப்படும் எனவும் அது தெரிவித்துள்ளது.

1969-ம் ஆண்டு பரீட்சையில் 3-ம் வகுப்பில் முதலிடம் பெற்றவர் செல்வன் சுபேந்திரன் கிருஷ்ணபிள்ளை (பருத். மெ. மி. உ. பெ. பா.), 2 ம் இடம் ந. சத்தியலிங்கம் (பம்பலப்பிட்டி இ. க. வி.), 3-ம் இடம் செ. செ. செல்வவனிசா (நவாலி சென். பீ. ரே. க. த. பா.).

4-ம் வகுப்பு முதலிடம் ச. கமலராசா (பம்பலப்பிட்டி இ. க. வி.) 2-ம் இடம் க. சத்தியகுமார் (சண்டிலிப்பாய் வடக்கு த. க. பா), 3-ம் இடம் சி வசந்தன் (பம்பலப்பிட்டி இ. க. வி).

5-ம் வகுப்பு முதலிடம் க. முகுந்தன் (தெல்லிப்பளை யூ. க.), 2-ம் இடம் செல்வகாந்தா செல்வரத்தினம் (பருத். மெ. மி. உ. பெ பா.), 3-ம் இடம் பொன்ஞஜி விஜேந்தி (கொம்பனி வீதி ரே. க. த. பா).

1970:ம் ஆண்டுக்குரிய 3-ம், 4-ம், 5-ம் 8-ம் வகுப்புக்களின் பரீட்சை இவ்வருடம் நவம்பர் நடுப்பகுதியை அடுத்து நடைபெறவிருப்பதாயும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஒக்டோபர் மாதம் 13-ந் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படுமென்றும் சங்கம் அறிவித்துள்ளது.

...தரர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினுர்.

கடந்தசனிக்கிழமை இரவு கரவெட்டி யார்கரு விநாயகர்ஆலயததில் சேதுராமன் சகோதரர்களின் நாதஸ்வரக்கச்சேரி நடைபெற்றது இங்கு கச்சேரி செய்வதற்காக சேது சகோதரர்கள் தமிழகத்திலிருந்து வந்திருந்தனர்.

சென்றமாதம் 19-ம் திகதியே இங்குவரவிருந்தஇவர்கள் விசா கிடைக்காததால் வருகையில் தாமதம் ஏற்பட்டது. திரு எம் சிவசிதம்பரத்தின் முயற்சியினுல் விசாவழங்கப்பட்டது.

சேது சகோதரரர்களின் கச்சேரியைக் கேட்பதற்காக இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் சமுத்திரம்போல் ஆலயத்தின் முன்புஉள்ள பரந்த வயல் வெளியெங்கும் நிரம்பியிருந்தன.

சுமார் 4 மணித்தியாலங்கள் ''நலம்தானு'' கலைஞர்களின் தேவகானம் கரவெட்டியில் எதிரொலித்துக் கொண்டேயிருந்தது. சேது சகோதர்களுடன் இலங்கை இந்தியப் புகழ் லயஞான குபேரபூபதி அளவெட்டி ...பேதமே இருக்கக்கூடாது. கலைஞர்கள் ஒரே ஒரு வரிசையிலேயே வைக்கப்படவேண்டியவர்கள் கலைஞர்கள் அனைவரும் கூட்டுறவு முறையில் இயங்கவேண்டும் கலைஞர்களுக்கென ஒருஸ்தாபனம் அவசியம்'

''தில்லாஞமோகஞம்பாள்'' படம் தானே உங்களை வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தி வைத்தது என்று கேட்டபொழுது ''ஆம்'' எனஒத்துக்கொண்ட திரு சேதுராமன் விளம்பரம் இன்றி எவரும் முன்னேறமுடியாது தமிழகத்தில் பல சிறந்த கலைஞர்கள் குப்பையில் குண்டுமணி போல் விளம்பரமின்றி இருக்கின்றனர், இத்தகைய முயற்சிகள் மூலம்தான் அவர்களைப் 'புகழ்' தேடிவரும் எனப் புன்சிரிப்புடன் கூறினுர்

உடுப்பிட்டி எம் பி திரு, எம் சிவசிதம்பரம் 'சேது' சகோதரர்களைப் பாராட்டி அவர்களுக்குத் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்

திரு, விதெட்சணமூர்த்திக்கும் திரு, சிவசிதம்பரம் பாராட்டுத் தெரிவித்தார்

குட்டிச் சுவராகிவிடும். பார்க்கவில்லையா அந்த கல்லோயா திட்டத்தை? வெறும் ஜப்பான் பொம்மையாகி விட்டதே!' என்று ஏளனம் செய்கிருர் டாக்டர் பெரேரா.

வாக்காளப் பெருமக்களுக்கு இந்த பிரசித்தம் எதிர்பாராத இடி குண்டாகி விடுகிறது. அவர்கள் மூச்சைப் பிடிப்பதோடு மூக்கிலும் விரல்வைக்கிருர்கள் தேசத்தின் தந்தையான அதி கௌரவ டி. எஸ். சேனநாயகாவின் கல்லோயாத் திட்டமா நட்டம் போய் விட்டதென்று டாக்டர் கூறுகிருர்? நம்பமுடியவில்லையே! அமெரிக்காவின் டெளஸி பள்ளத்தாக்கு திட்டத்துக்கும் இந்தியாவின் தாமோதர பள்ளத்தாக்கு திட்டத்துக்கும் எகிப்தின் அஸ்வான் அணைக்கட்டு திட்டத்துக்கும் சமானமானதென்று நாங்கள் நினைத்திருந்த கல்லோயா திட்டம் கோட்டை விட்டு விட்டதா?

டாக்டர் கூறுவதுஉண்மையாயிருந்ததால் கோடானுகோடி செலவில் அமைக்கப்பட்ட கல்லோயா திட்டத்தின் வரவு செலவு கணக்கு விபரங்கள் ஏன் வெளியிடப்படவில்லையென்று வாக்காளப் பெருமக்கள் மயங்குகிருர்கள்.

திரு. நவரத்தினம் மேலும் கூறியதாவது: தென்மராட்சிப்பகுதியிலுள்ள கோவில் முகாமையாளருக்கு சிறுபான்மைத் தமிழர்கள் எழுதியது போன்ற அனமதேயக் கடிதங்கள் அனுப்பப்படுவதாகத் தெரிகிறது இப்படியான கடிதங்கள் இரு பிரிவினருக்குமிடையில் சச்சரவு ஏற்படுத்தும் நோக்கமாகவே அனுப்பப்படுகிறது. அத்தகையஅனமதேயக் கடிதங்களை உடனடியாக பொலிசாரிடம் சமர்ப்பித்தால் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

இன்று சாவகச்சேரியில் நடைபெறவிருந்த தமிழரசு வாலிப முன்னணி மகாநாடு இக்கொலை சம்பவத்தினுல் நடைபெறவில்லை. இச்சம்பவம் நிகழ்ந்திராவிடில் இன்று பிரமாண்டமான ஊர்வலம் நடைபெற்றிருக்கும். அந்த ஊர்வலத்தை மறைந்த ஐயா வழிநடத்திக் கொண்டு சென்றிருப்பார்.

இத்தொகுதியில் இனிமேல் நடைபெறவிருக்கும் கூட்டங்களில் மாலைகள், சிகரங்கள், சப்பறங்கள், சேடணைகள் போன்ற மகிழ்ச்சிக்குரியவை இடம்பெருத நிலையை இந்த அசம்பாவித சம்பவம் ஏற்படுத்திவிட்டது.

பண்டிதர் சின்னத்தம்பி பேசும்போது எதிரியை பணிய வைப்பதுதான் பண்டைய இலக்கிய பண்பென்றும் எதிரியை அழிப்பது பண்பல்லவென்றும் கூறினுர். (கு வி ம)

— —

# "ஆண்டவனுல்தான் உங்கள் நெருக்கடிகளை தீர்க்க முடியும்"

யாழ்ப்பாணம், புதன்

'உங்கள் ஒவ்வொருவரையும் பலவிதமான நெருக்கடிகள் எதிர்நோக்கியிருக்கின்றன. விஞ்ஞானிகளால் இந்த நெருக்கடிகளை அளந்து பார்க்ககூடிய கருவிகளை உருவாக்கமுடியவில்லை.

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நேற்று முன்தினம் டீ. ஆர். மத்தியூஸ் சொற்பொழிவாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

யேகோவாவின் சாட்சிகள் 3-ம் நாள் மாநாட்டில் அவர் மேலும்கூறியதாவது: விஞ்ஞானிகளிடம் நெருக்கடி கருவிகள் இல்லாவிடினும் நிச்சயம் இந்த நெருக்கடிகள் ஒவ்வொருவரையும் பாதிக்கக்கூடிய தென்பதை புரிந்திருக்கிருர்கள்.

இப்பொழுது ராஜ்யங்களுக்கிடையேயோ, நாடுகளுக்கிடையேயோ, உள்ள நெருக்கடிகளைப் பற்றித் நான் பேசவரவில்லை. உங்களை தனிப்பட்ட முறையில் பாதிக்கும் நெருக்கடிகளைப் பற்றியே இங்கு குறிப்பிடுகிறேன். உங்களை எதிர்நோக்கும்3 பிரதான நெருக்கடிகள் இருக்கிறது. முதலாவது ஊதியத்தை நேர்மையான வழியில் சம்பாதிப்பதில் ஏற்படும் நெருக்கடி மற்றது விபத்தினுல், வியாதியினுல் ஏற்படும் நெருக்கடி இன்று உலகம் முழுவதும் அதிகரித்தவரும், குற்றங்கள் கொடுமைகள் மூன்ருவது நெருக்கடி இந்த மூன்று நெருக்கடிகளும் தனிப்பட்ட விதத்தில்பாதிக்கக்கூடியது. இதனை நாம் எதிர்க்க வேண்டும். நகரத்திலும் சரி, கிராமத்திலும் சரி, இந்த நெருக்கடிகள் பாதிக்கக்கூடியதாகவே இருக்கிறது. ஆகவே தான் இந்த நெருக்கடியிலிருந்து விடுபட சிலர், பல வழிகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். இதைத் தீர்க்க பல வழிகளை ஆராய்ந்து வருகிருர்கள்.

நியூயோர்க் நகரில் வைத்திய கலாசாலை ஒன்றுநடாத்திய ஆராய்ச்சியில் 1 லட்சத்து 75 ஆயிரம் பேரில், 18 பேர் மட்டுமே நெருக்கடியில் பாதிக்கப்படாமல் இருக்கிருர்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது ஆபிரிக்கா, கனடா, போன்ற நாடுகளிலும் நடத்த ஆராய்ச்சியில், இப்படியான பதிலே கிடைத்துள்ளது. அமைதியின்மை நெருக்கடி, ஒரே மூச்சிலிருந்து வருவதாக இருக்கிறது.

இந்த நெருக்கடிகளிலிருந்து விடுதலைபெற சிலர் மதுபானம் அருந்துகிருர்கள் வேறுசிலர் மயக்கம் தரும் வில்லைகளைப் பாவிக்கிருர்கள். பலர் அதிகமாக பொழுதுபோக்கில் காலத்தைக் கழிக்கிருர்கள். இன்றைக்கு அமைதியின்மை உலகம் முழுவதும் காணப்படுகிறது.

உங்களை பாதிக்கும் நெருக்கடிகளை எவ்வாறு தீர்ப்பது? கடவுளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வழிகளை புறக்கணித்துவிட்டு, வேறு வழிகளை கையாள்வதால், நெருக்கடிகளை தீர்க்க முடியாது, கடவுளிடம் விஸ்வாசம் காட்டுகிறவர்களுக்கு அவர் சந்தோஷமான வருங்காலத்தை ஏற்படுத்துவார். ஆண்டவன் எல்லா நெருக்கடிகளையும் சரியாக அறிந்திருக்கிருர். ஆதலால் அவரால் தான் உங்கள் நெருக்கடிகளை தீர்க்கமுடியும்.

0 0 0

## மகாவலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் புதிய கட்டிடங்களை நிறுவிக் கொடுத்து வருவதாயும், புதிய கட்டிடங்கள் நிறுவினுல் போதாது. மாணவர்கள் தங்கள் கல்வி வளர்ச்சியைக் குன்ருமல் பாதுகாத்து வரவேண்டும் என்றும், இன்றைய கல்வித் திட்டத்தில் பாடசாலைகளில் எதிர்காலத்தில் மாணவர்கள் உத்தியோகமென்று அலையாது இருக்க விவசாய அறிவுப் பாடமும் புகுத்தப்பட்டு வருவதாயும் இந்த விவசாயப் பாடத்தால் மாணவர்கள் படிப்பு முடிந்ததும் உத்தியோகம் என்று பாராது தம் சொந்த முயற்சியினுல் உயர முடியும் என்று கூறினுர்.

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் செ. சிவலிங்கம், சாவகச்சேரி முன்னைநாள் பொலிஸ் அதிபர் திரு. கு. துரைசிங்கம் ஆகியோரும் பேசினர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org